விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26

ஒலி 132 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 17 புதன்கிழமை (30.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## மின்சார விலை நிர்ணயத்தை அமுல்படுத்த வேண்டும்

### ஐ.எம்.எப் இலங்கையிடம் வலியுறுத்து

(கொழும்பு)

மின்சார விலை நிர்ணயத்தை இலங்கை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை பணித் தலைவர் எவன் பபகி யோர்ஜியோ இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் செலவு மீட்பு அடிப்படையிலான மின்சார விலை நிர்ணயத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்றும் இது நிதி ஆபத்து

15ஆம் பக்கம் பார்க்க

## உயிர் அச்சுறுத்தல் உள்ளவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுங்கள்

### முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய



(கொழும்பு)

உயிர் அச்சுறுத்தல் உள்ளவர்கள் நாட்டை விட்டு வெளியேறி விடுவதே மிகச் சிறந்த பாதுகாப்பாகும் என்று முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக நாட்டில் நடைபெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிடும்போது

15ஆம் பக்கம் பார்க்க

### சட்ட ஆட்சி நாட்டில் இல்லை

# பாதாள உலகக் கும்பல் நாட்டை ஆக்கிரமித்துள்ளது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



(கேகாலை)

சட்ட ஆட்சி நாட்டில் இல்லை. பாதாள உலகக் கும்பல் நாட்டை ஆக்கிரமித்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## சட்டமா அதிபரிடம் பட்டலந்த அறிக்கை

(கொழும்பு)

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட, பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் சட்டவிரோதமான தடுப்பு முகாம்கள் மற்றும் சித்திரவதை முகாம்களை நிறுவுதல் மற்றும் நடத்திச் செல்லல் குறித்த விசாரணை ஆணைக்குழு

15ஆம் பக்கம் பார்க்க

### அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை

## இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

அமெரிக்காவின் தீர்வை வரி தொடர்பான பேச்சுவார்த்தையில் இறுதித் தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை எனவும் மேலும் பல சுற்று கலந்துரையாடல் இடம்

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்குக் கடற்பரப்பில் 338 கிலோ கஞ்சா மீட்பு

### சந்தேகத்தில் ஒருவர் கைது

(கரணவாய்)

வட பகுதிக் கடற்பரப்பில் 338 கிலோ கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்தப்படுவதாக புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலுக்கு அமைய புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (28) இரவில் இருந்து வடக்கு கடற்கரைப் பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டி

04ஆம் பக்கம் பார்க்க

## அஞ்சல்மூல வாக்குப் பதிவு நிறைவு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அஞ்சல் வாக்குப் பதிவு நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு நிறைவடைந்துள்ளது.

இதற்கிடையில், 4 நாட்கள் நடைபெற்ற தபால்மூல வாக்க

15ஆம் பக்கம் பார்க்க

## கனேடிய பாராளுமன்றத்துக்கு இரு ஈழத் தமிழர்கள் தெரிவு

(ஒட்டாவா)

நடந்து முடிந்த கனேடிய பாராளுமன்றத் தேர்தலில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இரு தமிழர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.



15ஆம் பக்கம் பார்க்க




நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
1959 - 12 - 20



உதிர்வு
2025 - 04 - 29

## பிரபாகரன் சந்திரவதனா [சந்திரா]

அல்வாய் கிழக்கு அத்தாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபாகரன் சந்திரவதனா(சந்திரா) அவர்கள் நேற்று 29.04.2025 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் அமரர்களான தாமோதரம்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் அமரர்களான சின்னத்தம்பி இராசபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் பிரபாகரன் (ஓய்வுபெற்ற வைத்தியசாலை உத்தியோகத்தர், ரூபின்ஸ் வைத்திய சாலை உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும் பிரகலாத் (கஜன்-லண்டன்), துவாரகா, ரம்யா(ஆசிரியர்-யா/ நாகர்கோவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அஷ்வினியின் பெரியம்மாவும் நிவேதா(லண்டன்), நிலோசனன்(சுபாஸ் பேக்கரி), அனுதர்சன்(தபால் நிலைய உத்தியோகத்தர்-வல்வெட்டித்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும் அஷ்வினியின் பாசமிகு பெரியம்மாவும் அபிசாந், ஹர்ணிகா, ஹரிஷ்வா, ஹரிஷ்மிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 30.04.2025 புதன்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 11.30 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அல்வாய் கிழக்கு,
அத்தாய்.

(C-2851)

தகவல் :
குடும்பத்தினர்


ஓம்

காஷ்மீர் பஹல்காம்
நீ இந்துவா? என அடையாளம்
கேட்டுக் கொலை வெறித் துப்பாக்கிச் சூடு.
நேற்று அங்கே நாளை எங்கே?
இலங்கை இந்துக்களே சிந்திப்பீர்.
இலங்கையின் 25 மாவட்டங்களில்
பூசை வழிபாடு மோட்ச தீபம்

யாழ்ப்பாணத்தில் கோட்டை முனீச்சரர்
திருக்கோயில் சித்திரை 19 வெள்ளிக்கிழமை
(02.05.2025) காலை 10.00 மணி வழிபட வருக.

சிவ சேனை, இலங்கை.

(C-2854)

ஹாட்லிக் கல்லூரி
பருத்தித்துறை

தேவை : விடுதிக்காப்பாளர்
(ஆண் ஒப்பந்த அடிப்படையில்)
விண்ணப்ப முடிவுத்திகதி : 14.05.2025
விண்ணப்பம் அனுப்ப
வேண்டிய முகவரி : அதிபர், யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை

அதிபர்

(C-2849)

வீடு வாடகைக்குத் தேவை

வடமராட்சி, நெல்லியடி மற்றும் கரவெட்டி ஆகிய பகுதிகளில் இருவர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு :
075 829 3256/077 635 4224

(4066)


## அச்சுவேலியில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் குடும்பஸ்தர் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் அச்சுவேலி வல்லை வீதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான மாணிக்கம் சிவமூர்த்தி (வயது 69) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பான மரணவிசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-4,7)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

சைவ சித்தாந்த பண்டிதர்

## சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்

( BA. MA. Dip. In. Edu, ஓய்வு நிலை பிரதி அதிபர் )

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்,
இலட்சுமணந்தோட்டம் அருள் மிகு வீரமாகாளி அம்மன், வட பத்திரகாளி அம்மன் தேவஸ்தான
பிரதம குருவும், ஆதீனகர்த்தாவும், தேவஸ்தானாதிபதியும்

அம்மா மொழி அன்பு மொழி, என்றால்
அப்பா மொழி தியாகத்தின் ஒளி
நிகரில்லா உலகில்,
எம்மை நிலை நிறுத்த வந்தவர்
கஸ்டத்தை இஸ்ரமாக செய்தவர்
எம் துயர் துடைத்தவர்
எமக்கு உறுதுணையாக நின்றவர்
தூய்மையான பண்புடையவர்
துன்பங்களை தனக்குள் புதைத்தவர்,
எமைப் பேணிக் காத்தவர்,
எம் அன்புக்கு சொந்தமானவர்,
எம் பிறப்பிற்கு பொருள் தந்தவர்,
எம் தாயுமானவர்
அவரே எம் தந்தையுமானவர்
இனி உங்கள் நினைவுகளுடன் வாழும்
நாட்கள் கண்ணீரானது.



குடும்பத்தினர்

(4067)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கில்லியாய் நின்ற டில்லியை சொல்லி அடித்தது கொல்கத்தா

## தோல்வி எனும் இருளிலிருந்து ஒளிர்ந்தது

இந்தியன் பிரீமியர் போட்டியில் கொல்கத்தா அணி, 14 ஓட்டங்களால் டில்லியை வீழ்த்தியது.

டில்லி அருண் ஜெட்லி மைதானத்தில் நேற்று நடந்த பிரீமியர் லீக் போட்டியில் டில்லி - கொல்கத்தா அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணியின் தலைவர் அக்சர் படேல், களத் தடுப்பைத் தேர்வு செய்தார்.

கொல்கத்தா அணிக்கு ரஹ்மானுல்லா குர்பாஸ், சுனில் நரைன் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. மிட்சல் ஸ்டார்க் வீசிய முதல் ஓவரின் முதல் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய குர்பாஸ், கடைசி பந்திலும் பவுண்டரி அடித்தார். மறுபக்கம் சமீர பந்தில் சிக்சர் அடித்து தன் பங்கிற்கு ஓட்டக் கணக்கைத் ஆரம்பித்தார் நரைன்.

தொடர்ந்து 3, 4 வது பந்திலும் 4, 6 என விளாசினார். இரண்டாவது ஓவரில் கொல்கத்தா அணிக்கு 25 ஓட்டங்கள் கிடைத்தன. மீண்டும் வந்த ஸ்டார்க் ஓவரில் ஓட்ட மழை பொழிந்தார் குர்பாஸ். 4, 4, 6 என அடித்த குர்பாசை (26), கடைசி பந்தில் பெவிலியன் அனுப்பி வைத்தார் ஸ்டார்க்.

நரைனுடன் இணைந்த அணித் தலைவர் ரஹானே, ஸ்டார்க் வீசிய போட்டியின் 5 வது ஓவரில் தலா ஒரு சிக்சர், பவுண்டரி அடித்தார். தொடர்ந்து முகேஷ் குமார் ஓவரிலும் 2 பவுண்டரி அடிக்க, கோல்கட்டா அணி "பவர் பிளே" ஓவரில் (முதல் 6), 79/1 ஓட்டங்கள் குவித்தது. இந்நிலையில் 16 பந்துகளில் 27 ஓட்டங்கள் எடுத்த நரைன், விப்ராஜ் பந்தில் வீழ்ந்தார்.

**அக்சர் "இரண்டு"**

மறுபக்கம் அக்சர் படேல் சுழலில், ரஹானே (26 ஓட்., 14 பந்து), வெங்கடேஷ் (7) வீழ்ந்தனர். 32 பந்தில் 44 ரன் எடுத்த போது, ரகுவன்ஷி ஆட்டமிழந்தார். ரிங்கு சிங் தனது பங்கிற்கு 36 ஓட்., (25 பந்து) எடுத்தார். ஸ்டார்க் வீசிய கடைசி ஓவரின் 3, 4வது பந்தில் பாவெல் (5), அன்குல் ராய் (0) ஆட்டமிழந்தனர். 5வது பந்தில் ரசல் (17) ரன் அவுட்டானார்.

20 ஓவர்களில் கொல்கத்தா அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 204 ஓட்டங்களைக் குவித்தது. டில்லி சார்பில் ஸ்டார்க் 3, அக்சர், விப்ராஜ் தலா 2 விக்கெட்டுக் களைச் சாய்த்தனர்.

**டுபிளசி அரைச்சதம்**

கடின இலக்கைத் துரத்திய டில்லி அணிக்கு அபிஷேக் போரல் (4), கருண் நாயர் (15) "ஷாக்" கொடுத் தனர். ராகுல் (7) ரன் அவுட்டா னார். டுபிளசி, அக்சர் படேல் இணைந்து அணியை மீட்டனர். டுபிளசி அரைச்சதம் அடித்தார். கொல்கத்தா தரப்பில் சுழலில் மிரட்டினார் நரைன். முதலில் அக்சர் படேல் (43), அடுத்து ஸ்டப்ஸ் (1) என இருவரையும் நரைன் திருப்பி அனுப்பினார்.

அரைச்சதம் அடித்த டுபிளசி யும் (62) இவரது வலையில் சிக்கி னார். 18 வது ஓவரை வீசிய வருண் சக்ரவர்த்தி, அசுதோஷ் (7), ஸ்டார் க்கை (0) அடுத்தடுத்த பந்தில் அவுட்டாக, டில்லி தோல்வி உறுதி யானது. டில்லி அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களை எடுத்து 14 ஓட்டங்க ளால் தோல்வியடைந்தது. (ம-4,7)

## ரிஷப் பந்துக்கு ரூ.24 லட்சம் அபராதம்



மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதி ரான போட்டியில் பந்து வீசுவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொண்டதால் லக்னோ சூப்பர் ஜெயிண்ட்ஸ் அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மும்பை வான்கடே மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் முதலில் மும்பை அணி பேட்டிங் செய்தது. இந்தப் போட்டியில் மும்பை அணி 215 ரன்கள் எடுத்த நிலை யில், சேஸிங் செய்த லக்னோ 20 ஓவர் களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 54 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.


இந்தப் போட்டியில், முதலில் பந்து வீசிய லக்னோ அணி அதிக நேரம் எடுத்துக் கொண்டதால், ஐ.பி.எல் நடத்தை விதிகளின் பிரிவு 2.22இன் படி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது இரண்டாவது முறை என்பதால் ரிஷப்பந்துக்கு ரூ. 24 லட்சமும், இம்பேக்ட் வீரர் உட்பட அணியின் மற்ற வீரர்களுக்கு ரூ. 6 லட்சம் அல்லது போட்டி சம்பளத்தில் 25% அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, ஏப்ரல் 4 ஆம் திகதி மும்பை அணிக்கு எதிரான போட்டியில் தாமதமாக பந்துவீசியதற்காக இவ் அணி யின் கப்டன் பந்துக்கு ரூ. 12 லட்சம் அபராதமாக விதிக்கப்பட்டது.

மேலும், இந்த சீசனில் மூன்றாவது முறையாக இவ் அணி மெதுவாக பந்து வீசும் பட்சத்தில் ரிஷப்பந்துக்கு ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப் படும். (6-8)

## இன்றைய ஆட்டங்கள்



VS

நேரம்: இரவு 7.30



பஞ்சாப் | இடம்-சேப்பாக்கம் மைதானம் | சென்னை

## பதிலடி தருமா சென்னை?

### பஞ்சாப்புடன் இன்று பலப்பரீட்சை



சேப்பாக்கம் மைதானத்தில் இன்று நடக்கும் இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் தோனி தலைமையிலான சென்னை அணி, ஷ்ரேயசின் பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

ஐந்து முறை சாம்பியன் ஆன சென்னை அணி, இதுவரை பங்கேற்ற 9 போட்டியில் 2ல் மட்டும் வென்று 4 புள் ளியுடன் கடைசி இடத்தில் உள்ளது.

மீதமுள்ள 5 போட்டியில் பெரியளவு வெற்றி பெற்றாலும், "பிளே ஆப்" வாய்ப்பு உறுதியில்லை. எனினும் இளம் வீரர் கள் ஆயுஷ் மாத்ரே, ஷேக் ரஷித் அணி க்கு நல்ல துவக்கம் தர முயற்சிக்க வேண்டும். "மிடில் ஆர்டரில்" புதிய வரவு டிவால்ட் பிரவிஸ் நம்பிக்கை தருகி றார். 43 வயது கேப்டன் தோனி, சரியான வெற்றிக் கூட்டணியை கண்டறிய முடியாமல் தடுமாறுவது பலவீனம்.

பிரீமியர் தொடரில் பஞ்சாப் அணி இதுவரை கோப்பை வென்றது இல்லை. 2014ல் பைனலுக்கு சென்றது தான் அதிகபட்சம். அடுத்து ஒருமுறை கூட லீக் சுற்றை தாண்டவில்லை. தற் போது ஷ்ரேயஸ் தலைமையில், பொண் டிங் பயிற்சியில் சிறப்பாக செயற்படு கிறது. இதுவரை பங்கேற்ற 9 போட்டி யில் 5ல் வென்று (3 தோல்வி, 1 முடி வில்லை) 11 புள்ளியுடன் 5வது இடத் தில் உள்ளது.

மீதமுள்ள 5 போட்டியில் 4ல் வென் றால் 2014க்குப் பின் முதன் முறையாக "பிளே ஆப்" செல்லலாம். இளம் வீரர்கள் பிரியான்ஷ் ஆர்யா, பிரப்சிம் ரன் உதவ காத்திருக்கின்றனர்.

இரு அணிகள் மோதிய முதல் லீக் போட்டியில் (முல்லன்புர்) சென்னை அணி 18 ரன்னில் தோற்றது. இதற்கு இன்று சென்னை அணி பதிலடி கொடுக்குமா?. (ம-4,7)

## வடக்கு...

ருந்தனர்.

இந்த நிலையில் நேற்று செவ் வாய்க்கிழமை (29) பகல் வடக்கு கடற்பரப்பில் படகு ஒன்றினை கடற்படையினர் சோதனை செய்த போது அப்படகில் 147 பார்சல்கள் அடங்கிய 338 கிலோகிராம் கேர ளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன் அப் படகில் இருந்த சக்கோட்டை பகுதி யைச் சேர்ந்த ஒருவர் கைது செய்ய ப்பட்டுள்ளார். (ம-4,7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளையடிப்பவர்கள் அல்ல

## மக்களின் பாதுகாவலர்களே நாம்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் மக்களின் பணம் கொள்ளையடிக்கப்படமாட்டாது எனவும், நாட்டின் வரலாற்றை மாற்றிய இரண்டு தேர்தல்களில் வெற்றிபெற்றது போன்று உள்ளூராட்சி மன்றங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனை பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாம் மக்களின் பணத்தினை கொள்ளையடிப்பவர்கள் அல்ல எனவும், நாம் மக்களின் பணத்தினைப் பாதுகாப்பவர்கள் எனவும், ஒரு அரசாங்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றநாள் முதல் ஜனாதிபதி அதற்கு முன்னுதாரணமாக உள்ளார்.

அத்துடன் எதிர்த்தரப்பினர் தமது இயலாமையை மறைக்க எம்மை கொள்ளையர்கள் என்று கூறுகிறார்கள் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (6-8)

# பொருளாதார கணக்கெடுப்பு நடத்த அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டில் விவசாய நடவடிக்கைகள் மற்றும் 2026 ஆம் ஆண்டில் விவசாயம் சாராத நடவடிக்கைகளை உள்ளடக்கிய பொருளாதாரக் கணக்கெடுப்பை நடத்துவதற்கு நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2013/14 ஆம் ஆண்டில் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் இறுதியாகப் பொருளாதாரக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த கணக்கெடுப்பில் திரட்டப்பட்ட தரவுகளைக் காலத்தோடு தழுவியதாக இற்றைப்படுத்துவதற்காக விவசாயம் மற்றும் விவசாயம் சாராத பொருளாதாரச் செயற்பாடுகளை வேறு வேறாக இரண்டு கட்டங்களாக உள்ளடக்கும் வகையில் திணைக்களத்தால் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் பொருளாதாரக் கணக்கெடுப்பை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

இதன் பிரகாரம் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி சமர்ப்பித்த முன்மொழிவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (6-8)

# மே தினப் பேரணியும் பொதுக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் பொருளாதார நெருக்கடிகளுக்கும் தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வலியுறுத்தும் நோக்கில் நாளை வியாழக் கிழமை யாழ்ப்பாணத்தில் புரட்சிகர மே தினப் பேரணியும் பொதுக் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

மேற்படி மேதினப் பேரணி பிற்பகல் 3.30 மணிக்க ஐந்து சந்தியிலிருந்து ஆரம்பமாகவுள்ளதுடன் பொதுக்கூட்டம் யாழ்.றிம்மர் மண்டப வளாகத்தில் புதிய ஜனநாயக மாக்சிக லெனினிசக் கட்சியின் வட பிராந்தியச் செயலாளர் கா.கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (3-8)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை, வளன புரம், புனித சூசையப்பர் ஆலய இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்புத்துறை, வளன புரம், புனித சூசையப்பர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (3-8)

# சிறப்புப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

இலங்கை சிவசேனை அமைப்பினால் காஷ்மீர் தீவிரவாத தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 26 பேரின் நினைவாக இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களிலுள்ள திருக்கோயில்களிலும் மோட்ச தீபம் மற்றும் சிறப்புப் பிரார்த்தனை இடம் பெறவுள்ளது.

இந்த வகையில் யாழ். கோட்டை முனீஸ்வரர் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மோட்சதீபம் மற்றும் சிறப்புப் பிரார்த்தனை இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (3-8)

# உணவென நினைத்து வெடியை கடித்த பல் வைத்தியர்

## வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

மகன் வாங்கி வைத்திருந்த வெடியை வாயால் கடித்த அவரது தாயான பல் மருத்துவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் பாணந்துறை, வேகட பிரதேசத்தில் இடம்பெற்றது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பல் வைத்தியரின் மகன் வெடியை வாங்கி வீட்டிலுள்ள மேசையில் வைத்துள்ளார்.

அதன் பின்னர் வீட்டிற்கு வந்த குறித்த பெண், மேசையில் இருந்த வெடியை எடுத்து கடித்து பார்த்த போது அது திடீரென வெடித்துள்ளது.

இதனையடுத்து, படுகாயமடைந்த பெண், சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வெடியை உணவுப் பொருள் என நினைத்து அவர் கடித்ததாக தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

# விலங்கியல் பூங்காவுக்கு புதிய விலங்குகளை கொண்டு வரத் திட்டம்

(கொழும்பு)

விலங்கு பரிமாற்றத் திட்டத்தின் கீழ், தெஹிவளை விலங்கியல் பூங்காவுக்கு பல புதிய விலங்குகள் கொண்டு வரப்படவுள்ளதாக தேசிய விலங்கியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, விலங்கியல் பூங்காவுக்கு விரைவில் மூன்று வரிக்குதிரைகள், இரண்டு ஜோடி ஒட்டகச் சிவிங்கிகள், பிரான்சிலிருந்து மூன்று அனகொண்டாக்கள், மாண்டரின் வாத்துகள் மற்றும் இரண்டு பெரிய ஆமைகள் வழங்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு ஈடாக, தேசிய விலங்கியல் திணைக்களம் இரண்டு ஜோடி டோக் மக்காக் குரங்குகள், ஒரு ஜோடி மர அணில்கள், ஒரு ஜோடி நீர் யானைகள், ஒரு ஜோடி மீன்பிடி பூனைகள், ஒரு பச்சை விரியன் பாம்பு மற்றும் ஒரு கண்ணாடி விரியன் பாம்பு ஆகியவற்றை பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள அந்தந்த நாடுகளுக்கு அனுப்பியுள்ளது.

அருகிவரும் மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளான உயிரினங்களுக்கான பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க முயற்சிகளை ஆதரிக்கும் அதேவேளை, தெஹிவளை விலங்கியல் பூங்காவில் உயிரின பன்முகத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய விலங்கியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (6-8)

# இராசிபலன்

30.04.2025
சித்திரை 17, புதன்கிழமை
திருதியை முன்னிரவு 06.46 மணிவரை

ரோகிணி முன்னிரவு 08.39 மணிவரை
சுபநேரம்04.28 -05.58மணிவரை
இராகுகாலம் 11.58 - 01.28மணிவரை

சந்திராஷ்டமம்-
சுவாதி,விசாகம்
அக்ஷய திருதியை

வள்ளுவன்




துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் வாய்ப்புண்டு.




விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அதிஷ்ட வாய்ப்புகள் அலைமோதும் நாள்.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணமல் இருப்பது நல்லது, சேமிப்புகள் கரையும் வாய்ப்புண்டு, குடும்பத்திற்கிடையே விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது.




வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், உறவினர் வழியில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.




திட்டமிட்ட காரியங்களில் திசைத்திருப்பங்கள் ஏற்படலாம், பலநாட்களாகப் பார்க்க நினைத்த நபரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்




செய்தொழிலில் ஆர்வத்துடன் பணிபுரிவீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.




யோகங்கள் வந்து சேர யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், பயணங்களினால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் அக்கறை கூடும்.




புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது,தொழிலில் சிறு மாற்றங்கள் செய்யும் எண்ணம் உருவாகும்.




நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வுகள் குறையும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.




இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலன் சீராகும், போசன சுகமுண்டு.




பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்,நேற்றைய பிரச்சினையொன்று இன்று முடிவுக்கு வரலாம்.

ஒருவருடைய உணர்ச்சிகளின் வடிகால் உருவமே கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35 வருடங்களின் பின்னர் ஆரம்பமான பேருந்து சேவை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பலாலி இடையிலான அரச பேருந்து சேவை 35 வருடங்களின் பின்னராக நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யுத்தம் காரணமாக கடந்த 35 வருடங்களாக உயர்பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட குறித்த பகுதியூடாக பொது மக்கள் நடமாட முடியாத சூழல் காணப்பட்டது.

இதன் காரணமாகப் பயணிகள் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வரை மாத்திரமே பயணம் செய்து வந்தனர்.

கடந்த 10ஆம் திகதி நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்ட பலாலி வீதி வரை இன்றையதினம் பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.


பேருந்து சேவை நேர அட்டவணை தொடர்பாக பின்னர் அறியத்தருவதாக பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். அதேவேளை யாழிலிருந்து புறப்பட்டு மானிப்பாய், ஆலங்குளாய், அளவெட்டியூடாக தெல்லிப்பழை நோக்கி முன்னெடுக்கப்படுமொரு பேருந்து சேவையும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் ஆலோசனைக்கு அமைவாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவரின் பிரசன்னத்துடன் பேருந்து சேவைகள் ஆரம்பமாகியுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ.பவானந்தராஜா உள்ளிட்ட போக்குவரத்து சபை உத்தியோகத்தர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (6-8-33)

# வடமாகாண சபையின் நிதிக்கூற்று அறிக்கை

## ஆளுநரிடம் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

2025 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண சபையின் நிதிக்கூற்று அறிக்கை புத்தகம் வடக்கு மாகாண ஆளுநரிடம், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளரினால் வழங்கி வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட மீளாய்வுக் கூட்டம் நேற்று ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது அறிக்கை புத்தகம் கையளிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர், 2025ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட அளவில் இல்லை எனச் சுட்டிக் காட்டியதுடன் அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஒதுக்கப்பட்ட நிதியை ஒதுக்கிய திட்டங்களுக்கு உரிய காலப்பகுதிக்குள் செலவு செய்து முடிக்கவேண்டியது மாகாணங்களின் பொறுப்பு எனக் குறிப்பிட்டார்.

திட்டங்களை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தி முடிக்காமல் அதற்கு சாட்டுப்போக்குச் சொல்லவேண்டாம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த முன்னேற்ற மீளாய்வுக்கூட்டத்தில், வடக்கு மாகாணத்தில் தற்போது முருங்கை மற்றும் மாம்பழச் செய்கையில் ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அது தொடர்பில் ஆராய்ச்சிகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்த ஆளுநர், புதிய இனங்களை அறிமுகப் படுத்தும்போது பாரம்பரிய இனங்களை அழிவடையாமலும் பார்த்துக்கொள்வது விவசாயத் திணைக்களத்தின் பொறுப்பு எனவும் குறிப்பிட்டார். (6-8)

# க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்-2024

## யாழ். இந்துக் கல்லூரி

### உயிரியல் பிரிவு

ஜெ.பிரணவன்-3ஏ, ஜெ.சரவணன்-3ஏ, ஆர்.அபிராம்- 3ஏ, எஸ். ஸ்ரீகாந்த்-3ஏ, டி.லொஹான் ஸ்ரென்விஜ்-3ஏ, எஸ்.லதீசனன்-3ஏ, ஜெ.லதுர்சன்-3ஏ, எஸ் விஸ்ணுஜன்-3ஏ, எஸ். மாதுளன்-3ஏ, எம்.மிருணாளன்-3ஏ, எஸ். சங்கீதனன்-3ஏ, எஸ்.வசீகரன்-3ஏ, ரி.ஆனந்தராம்-3ஏ, எஸ்.கவின்-3ஏ, ஆர்.ரதுக்சன்-3ஏ, சி.சங்கீதன்-3ஏ, வி.ஆகாஷ்-3ஏ, எல். லிசோகன்-3ஏ, எஸ்.கஜானன்-3ஏ, கே.தேனுசன்-3ஏ, கே.தருண்-3ஏ, வி.பரத்வாசன்-3ஏ.

எஸ்.துளசிகன்- 2ஏபி, எஸ்.சபிஷன்- 2ஏபி, எஸ்.கஜன்- 2ஏபி, என். நிருத்திகன்-2ஏபி, எஸ்.ஹரீசான்- 2ஏபி, யு.கிருபரன்- 2ஏபி, எஸ். கலியுகன்- 2ஏபி, கே. மயூரேஷ்- 2ஏபி, எஸ்.விஸ்ணு- 2ஏபி.

### பௌதீகவியல் பிரிவு

எம்.அகரன்-3ஏ, எஸ்.அபிஷேகேதிவர்-3ஏ, ஜி.சங்கரன்-3ஏ, ஆர்.ஜெருசன்-3ஏ, எஸ்.லாவண்யன்-3ஏ, எஸ்.கயலக்சன்-3ஏ, எ.பிரின்சேஸியம்-3ஏ, பி.சுடரலகன்-3ஏ, எஸ்.தமீசன்-3ஏ, எஸ்.குணாளன்-3ஏ, எஸ்.சிவோடயன்-3ஏ, எஸ்.நிதர்சன்-3ஏ, எஸ்.தேனுஜன்-3ஏ, ஜெ.ஆர்திகன்-3ஏ, ஜெ.துஷியந்-3ஏ, கே.டிறோசென்-3ஏ, எஸ்.புதுமிகன்-3ஏ, ஜி.அனுஷன்-3ஏ, எம்.ஷங்கமன்-3ஏ, வி.திரேஷன்-3ஏ, ரி.பகீரதன்-3ஏ, கே.பிரணவன்-3ஏ, எ.மகின்தன்-3ஏ, ஆர்.சோபிதன்-3ஏ, என்.ஷாஹித்தியன்-3ஏ, பி.சன்ஜீவன்-3ஏ, ஜி.கஜதக்சன்-3ஏ,

எஸ்.அபினாஷ்-2ஏபி, என்.ஆதித்தியன்-2ஏபி, எம்.பிரணவன்-2ஏபி, எச்.ஹெட்றியல்-2ஏபி, சி.நந்தலாலன்-2ஏபி, ஆர்.மகிழ்றஜன்-2ஏபி, வி.சிறிகஜன்-2ஏபி, எஸ்.அபிரூபன்-2ஏபி, பி.குருசேத்திரன்-2ஏபி, பி.கிருஷாந்-2ஏபி, பி.விஷ்னுஜன்-2ஏபி, எஸ்.ஷெரோன்-2ஏபி, ரி.யதுஷனன்-2ஏபி, எ.அபேர்நாத்-2ஏபி,

### பொதுப்பிரிவு

ஜெ. பபிசன்-3 ஏ, ஜெ.அபிநயன்-3ஏ, ஆர். தருண்-3 ஏ

எஸ். தர்மிகன்-2ஏபி

### வணிகப்பிரிவு

வி.வாரணன்-3ஏ

கே.சஞ்ஜெய்-2ஏபி

### உயிரியல் தொழில் நுட்பம்

ஜெ.துஷாந்த்- 3 ஏ

### இயந்திரவியல் தொழில் நுட்பம்

எஸ்.சந்தோஷ்-3 ஏ

### கலைப்பிரிவு

எம்.நயனன்-2 ஏபி, வை. சாருஜன்- 2 ஏபி

## வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

### உயிரியல் பிரிவு

ரி.சிம்மஹி- 3ஏ, எச்.ஹர்ணி-3ஏ, ஆர்.கிஷானி-3ஏ, ஆர். யதுசிகா-3ஏ, எஸ். டிலக்ஷனா-3ஏ, ஆர்.அஸ்மிகா-3ஏ, பி.அபிஷா-3ஏ, எஸ். விவேகா-3ஏ, ஜி.ஆதித்யா-3ஏ, ஜெ.அபிசாலினி- 3 ஏ, ஜி.வைஷ்ணவி- 3-ஏ, பீ.ஷெலினி-3ஏ, எஸ்.ஷாருஜா- 3ஏ.

என்.இந்துஜா-2ஏபி, என்.அபிராமி-2ஏபி, ஆர்.வஜனிகா-2ஏபி, எ.சௌமிகா-2ஏபி, ஐ.தயானி- 2 ஏபி, எ.மேரி அக்ஷயா- 2ஏபி, ஜி.ஹருணி-2ஏபி.

### பௌதீகவியல் பிரிவு

எம். ரதாஞ்சலி- 3ஏ, பி. லக்ஷாயினி- 3ஏ, ரி.சப்தவி- 3ஏ, பி.பிரியங்கா- 3ஏ, ஏ. ஹம்சனா- 3ஏ, கே. வேந்தினி- 3ஏ, ரி. ஜெகதாயினி-3ஏ, ஆர். லக்ஷிகா-3ஏ, ஜெ.சிவசங்கரி-3 ஏ, ஜெ.திவாயினி-3ஏ

எஸ்.பிரசாயினி- 2ஏபி, எஸ்.மதுராந்தி- 2ஏபி, கே.ஜனனி- 2ஏபி, என்.தரினிகா- 2ஏபி, பி.ஜோசானுகா-2 ஏபி, பி.சர்மினி- 2ஏபி, எஸ்.சரண்யா- 2ஏபி, என்.ஆரன்யா- 2ஏபி

### வணிகப்பிரிவு

எஸ். யஸ்வந்திகா- 3ஏ, எம்.லக்சிகா- 3 ஏ, எஸ்.ரிஷியா-3ஏ, ஆர். வின்ஸ்னெலா-3ஏ, ஆர்.நர்த்தகை-3ஏ, பி. பவிஷா-3ஏ, பி. அபிநயா- 3ஏ, ஆர். சாகித்தியா- 3ஏ.

ஜெ. டிலுக்சி-2 ஏபி, எ.கலாநிதி- 2ஏபி,

### கலைப்பிரிவு

எம்.மயூரா-3ஏ, யு.நிஷாந்தினி-3ஏ

எஸ்.ஸ்ரீகோபியா-2ஏபி, எஸ்.ஹர்சிகா-2ஏபி

## கொக்குவில் இந்துக்கல்லூரி

### உயிரியல் பிரிவு

எம்.அனுஷன்-3ஏ, என்.பிருந்தாபன்-3ஏ, எ.ரக்ஷிகா-3ஏ

என்.விபூசன்-2ஏபி

### பௌதீகவியல் பிரிவு

எஸ்.பிரவீனன்-3ஏ, ரி.அபிலாஷ்-3ஏ, கே.கிஷான்-3ஏ

பி.தபின்ஷன்-2ஏபி, ரி.டபேஷன்-2ஏபி,கே.வெங்கடேஸ்-2ஏபி

### வணிகப் பிரிவு

எம்.ஷஞ்ஜெய்-3ஏ, ரி.ஹரிஸ்ராஜ்-3ஏ, பி.சஞ்சய்-3ஏ, கே.டயானி-3ஏ, பி.கனிஷா-3ஏ, வி.லக்ஷிகன்-3ஏ, எம்.சுஜனி-3ஏ, ரி.தனுஸ்ரன்-3ஏ, எஸ்.சுமேக்கா-3ஏ, வி.சரண்யா-3ஏ

### கலைப்பிரிவு

இ.லலித்யா-2ஏபி, ஜெ.ஜெனிஸ்ரெலா-2ஏபி, எஸ்.விஸ்ணுகா-2ஏபி, ஆர்.பாமிலா-2ஏபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு அதிக கிராக்கி

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனையாகாமல் தேங்கி இருப்பதாக வெளியான தகவலை, வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் நிராகரித்துள்ளது.

வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர், இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களில் 75 சதவீதமானவை இதுவரையில் விற்பனையாகி இருப்பதாகவும் அச் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நாட்டுக்கு வாகன வரத்தில் பற்றாக் குறை இல்லை என, வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகங்கள் ஊடாக இதுவரையில் ஏழாயிரம் புதிய வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

புதிய வாகனங்களுக்கு அதிக கிராக்கி நிலவுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் வெளிநாட்டு நாணயப் பெறுமதியில் நிலவுகின்ற தளம்பல் நிலை காரணமாக, வாகனங்களின் விலையில் வீழ்ச்சி ஏற்படுமா? என்பதைச் சரியாகக் கணிக்க முடியாதிருப்பதாகவும், வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-8)

# ஜூன் மாதம் இலங்கை வரவுள்ள சீன வர்த்தகத்துறை அமைச்சர்

(கொழும்பு)



சீனாவின் வர்த்தகத்துறை அமைச்சர் வாங் வென்டாவோ, எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உலக நாடுகளுக்கு விதித்துள்ள பரஸ்பர தீர்வை வரியினால் பல்வேறு நாடுகள் வர்த்தக ரீதியான பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில், அவரது விஜயம் அமையவுள்ளது.

எனினும் அவரின் விஜயத்துக்கான திகதி மற்றும் கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் தொடர்பாக இன்னும் திட்டமிடப்படவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க சீனாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தபோது, இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையிலான வர்த்தக உடன்படிக்கையை விரைவுபடுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந் நிலையில், சீனாவின் வர்த்தகத்துறை அமைச்சர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் போது இந்த விடயத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (6-8)

# நிதியியல், தொழிற்பாடுகள் அறிக்கைகள் கையளிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் 2024 ஆம் ஆண்டுக்கான நிதியியல் அறிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான அறிக்கையை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கையளித்துள்ளார்

அத்துடன் அறிக்கையின் பிரதியொன்றும் ன்றை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவினால் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவிடமும் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# திருவருள் மிகு ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான புனராவர்த்தன

## அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்.

## திருக்குடமுழுக்கு பெருவிழா




எல்லாம் வல்ல ஸ்ரீ நாகவரத நாராயணப் பெருமானின் திருப்பாதங்களைப் பணிந்து, இலங்கைத் திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தில் அளவை நாகேஸ்வரத்தில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ நாகவரத நாராயணப் பெருமானுக்கு அஷ்டபந்தன பஞ்ச குண்டபக்ஷ மகாகும்பாபிஷேகம் இன்றைய தினம் (30.04.2025) சிறப்புற நடைபெற திருவருளும் அருட்கவி. சீ. விநாசித்தம்பிப் புலவரது( இவ்வாலய ஸ்தாபகர்) குருவருளும் கைகூடியுள்ளது.

இற்றைக்கு 350 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டது இவ்வாலயம். ஆரம்பத்தில் இரண்டு பாம்புகளாகவும், சிறுவன் சிறுமியாகவும் காட்சியளித்து "கேணியடி நாகதம்பிரான்" என அழைத்து வழிபடப்பட்டது.

1953 இல் இவ்வாலயத்துக்கு அருகில் குடியமர வந்த அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவரது கனவில் சிறுவன் சிறுமியாகத் தோன்றிச் சிறுமி சிறுவனைச் சுட்டிக்காட்டி "இவர் எனது அண்ணன் நீ பயப்படாதே என்னை ஆதரித்தால் உன்னை ஆதரிப்போம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். கனவில் தோன்றிய ஸ்ரீ நாகவரத நாராயணப்பெருமானும் ஸ்ரீ மனோன்மணித் தாயாரும் அவருள் நின்று அருள்வாக்கு நல்கி வழிநடாத்தி நனவான ஆலயமாகத் தோற்றம் பெற்றதே இவ்வாலயம் ஆகும்.

அருட்கவி ஐயாவால் இவ்வாலயம் காணி வாங்கப்பட்ட பொழுது ஒரு முக்கோணக் கல்லும் பழைய சூலமும் செப்புக் கம்பியால் செய்த நாகவடிவமுமே காணப்பட்டது.பின்னர் அவரால் அவ்விடத்தில் ஒரு சிறுகோவில் அமைக்கப்பட்டு படிப்படியாக வளர்ச்சியடைந்து 03.09.1979 இல் திருவோணத்தில் முதலாவது கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

27.08.1986 இல் கொடியேற்றத்துடன் கிருஷ்ண ஜெயந்தியை தேர் உற்சவமாகக் கொண்டு மகோற்சவம் இடம்பெற்று வளர்ந்து வருகின்றது. கடும் கோடையிலும் மனோன்மணி அம்மனது தூபியின் நான்கு புறத்திலும் ஆகாயத்தீர்த்தம் பல நாட்களாக பெருகியமை, இறந்த பாலகன் உயிர் பெற்றமை, செம்மந்தாரை மலர் வெண்மந்தாரை மலராகப் பூத்தது, சந்தான செல்வம் வழங்கியமை எனப்பல அற்புதங்களை ஆற்றிய சிறப்புடையது மட்டுமல்ல என்னைப் பொறுத்தவரையில்






இன்று நடைபெறும் மகாகும்பாபி ஷேகமும் இறைவனது திருவருளேயாகும்.

ஏனெனில் இவ்வாலய ஸ்தாபகரும் எனது தந்தையுமான அருட்கவி. சீ. விநாசித்தம்பிப் புலவர் கூறுவார். " நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்கத் தேவையில்லை.அவர் தன்னுடைய வேலையைத் தானே பார்த்துக் கொள்ளுவார்" என்று. அதுபோல புனருத்தானப் பணியும் குறுகிய காலத்தில் ஆரம்பித்து நிறைவெய்தியமையும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகவரத நாராயணப் பெருமானின் திருவருளேயாகும்.

இத்தகைய இறைவன் இந் நன்னாளில் தன் அன்படியார்களுக்கு நல்லருள் பாலித்து அருள்வார் என அவனருளால் அவன் தாள் வணங்கி நிற்கிறேன்.

திருமதி.தி.ஸ்ரீரங்கநாயகி, தலைவர்,
ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம் நாகேஸ்வரம், அளவெட்டி.

### நாகவரத நாராயணர் தோத்திரம்



கண்ணனின் மருகன் கௌரியின் மைந்தன்
திண்ணிய விடையவன் தேர்க்கா விறுத்தோன்
பண்ணவன் கணபதி பதமலர் தொழுதெழ
எண்ணிய நினைவுகள் இனிது கைகூடுமே.

பங்கயத் தாளும் பாரிடத் தாளும்
தாங்கிடப் பாம்பின் சயனந் துயின்றாய்
எங்களைக் காப்பாய் எனநினை யடைந்தோம்
மாங்கள நாக வரதநா ரணனே.

பொன்னுயர் திகிரி பொலிமலர் தண்டு
இன்னிசைச் சங்கம் ஏந்திய கிருஷ்ணா
முன்னிய திருவாய் மொழியெமக் குரைப்பாய்
மன்னவா நாக வரதநா ரணனே.

பரந்திடு நவகோள் பக்தருக் குவந்த
வரந்தரு வண்ணம் வரம்புரைப் பவனே
நிரந்தர முன்னை நினைப்பவர்க் குதவ
வரம்பெரு நாக வரதநா ரணனே.

ஆதவா விண்ணோர்க் கரியமா மலையே
பூதனை முலைப்பால் புசித்தபூ பாலா
வேதகீ தாசரம் விளம்பிய குருவே
மாதவா நாக வரதநா ரணனே.

அஞ்சிவந் துன்தாள் அடைக்கலம் புகுவார்
சஞ்சலம் துடைக்கும் தமோ தரனே
நெஞ்சகம் குளிர நின்றெமை புரப்பாய்
மஞ்சுயர் நாக வரதநா ரணனே.

முத்தமிழ் நயக்கும் மூர்த்தியே தரும
தத்துவ நடனச் சரசகோ விந்தா
பத்தியா லுன்சீர் பாடிடப் பணியாய்
மத்தனை நாக வரதநா ரணனே.

பெண்நிதி நலங்கள் பெருமையென் றலைந்தேன்
தண்ணளி யிலாத சழக்கனேன் தன்னை
புண்ணிய நெறிதனில் புகும்பே றருள்வாய்
வண்ணனே நாக வரதநா ரணனே.

சரிபிழை யறியேன் சமயநூ லுணரேன்
இருதலைக் கொள்ளி எறும்பென இழைத்தேன்
கரிதுயர் தீர்தாயே கடைக்க ணல்காயோ
வரியெழில் நாக வரதநா ரணனே.

ஒன்றென பலவென் உலகெலாம் நிறைந்து
நின்றனை சிவனென நீயேபரம் பொருள்
என்றித யத்தில் இருத்தினேன் கண்டாய்
வன்றிதல் நாக வரதநா ரணனே.

ஈனராம் நூற்றுவர் ஏங்கவும் ஐவர்
மானமாய் வாழவும் வந்தவ தரித்தாய்
ஊனமா நோய்தீரத் துணையுணர் வேனோ
வானமா நாக வரதநா ரணனே.

கதிகரை காணாக் கடலெனும் மாயைப்
பொதிசுமந் துழன்றேன் புன்மையைத் தீராய்
விதியெழுத் தகற்றி வீட்டினைக் காணும்
மதிதரும் நாக வரதநா ரணனே.

கலாநிதி. அருட்கவி. சீ.விநாசித்தம்பி புலவர்.



### அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாக வரத நாராயணர் தேவஸ்தானம் பிரதமகுருவின் ஆசியுரை

ஸ்ரீநாகவரத நாராயணப் பெருமானுடைய விசுவாவசு வருட அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் சித்திரைத் திங்கள் 17 ஆம் நாள் புதன்கிழமை நடைபெறத் திருவருள் கைகூடி யிருக்கிறது. இவ்வாலயம் சீ. விநாசித்தம்பி ஐயா அவர்களால் ஸ்தாபித்து அவரின் பெருமுயற்சியால் இவ்வாலயம் பெரும் ஆலயமாக வளர்ச்சி கண்டிருக்கிறது.

இவ்வாலயத்தில் எனது பேரனாரும் பிரதம குருவாகப் பணியாற்றி இருக்கிறார். அவ் வழியில் நாமும் பணியாற்றி இக் கும்பாபிசேகம் சிறப்புறவும் அடியார்கள் சேமம் உறவும் நாராயணப் பெருமானை வணங்கி எனது ஆசியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்ச்சியடைகின்றேன்.


அ.மதிவதனக்குருக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## துறைமுகத்தில் வெடி விபத்து
### பலி எண்ணிக்கை 65 ஆக உயர்வு

### ஈரானில் சம்பவம்



(டெஹ்ரான்)

ஈரான் நாட்டின் தென் பகுதியில் உள்ள துறை முகத்தில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில், பலி எண்ணிக்கை 65 ஆக உயர்ந்துள்ளது.

மேற்காசிய நாடான ஈரானின் தெற்குப் பகுதியில் உள்ள பந்தர் அப்பாஸ் நகருக்கு அருகே உள்ளது ராஜேய் துறைமுகம். பாரசீக வளைகுடாவில் உள்ள ஹோர்முஸ் ஜலசந்தியில் உள்ள இந்தத் துறைமுகம் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும், 8 கோடி டன் அளவுக்கு பொருட்கள் கையாளப்படுகின்றன.

இந்த துறைமுகத்தில் இருந்த கன்டெய்னரில் இருந்து திடீரென மர்ம பொருள் வெடித்து சிதறியது.

இதனால் அப்பகுதி முழுதும் கரும்புகை ஏற்பட்டது. பல கி.மீ தொலைவில் இதன் அதிர்வு உணரப்பட்டது. இந்த விபத்தில், பலி எண்ணிக்கை 65ஆக உயர்ந்துள்ளது. 750க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்த தீ விபத்து மற்றும் அதை தொடர்ந்த வெடி விபத்துக்கு என்ன காரணம் என்பது, அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. எனினும், ஏவுகணைகளுக்கான எரிபொருட்கள் தீப்பிடித்து, விபத்து நடந்திருக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது. (6-8)

# 3 நாட்கள் தற்காலி

# அத்துமீறினால் ப

## உக்ரைனுக்கு ரஷ்யா எ

(மொஸ்கோ)

**இரண்டாம் உலகப் போரில் ரஷ்யா வெற்றி பெற்றதன், 80ஆவது ஆண்டு வெற்றி விழா கொண்டாட்டம் தலைநகர் மொஸ்கோவில் நடைபெறவுள்ள நிலையில் 8-10ஆம் திகதி வரை மூன்று நாள் போர் நிறுத்தத்திற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடி உத்தரவிட்டுள்ளார்.**

மனிதாபிமானக் கருத்தாய்வுகளின் அடிப்படையில் இந்தப் போர்நிறுத்தம் மே 8 ஆம் திகதி நள்ளிரவில் ஆரம்பித்து 72 மணித்தியாலங்கள் தொடரும் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

இந்தப் போர் நிறுத்தத்தை கடைப்பிடிக்க ரஷ்யாவும், உக்ரைனை வலியுறுத்தியுள்ளது.

இந்தக் காலகட்டத்தில், அனைத்து இராணுவ நடவடிக்கைகளும் நிறுத்தப்படும். போர் நிறுத்தத்தை மீறி உக்ரைன் படையினர் தாக்குதல் நடத்தினால் தக்க பதிலடி கொடுக்கப்படும் எனவும் ரஷ்யா எச்சரித்துள்ளது.

மூன்று வருட போரை முடிவுக்குக் கொண்டுவர துப்பாக்கிச் சூட்டை நிறுத்

## வரலாறு காணாத மின்தடையால் ஸ்தம்பிதமடைந்த ஐரோப்பிய நாடுகள்




(மாட்ரிட்)

ஐரோப்பிய நாடுகளான ஸ்பெயின், போர்த்துக்கல், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத மின்தடையால் ரயில், விமானப் போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வழக்கத்துக்கு மாறாக ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் பிரான்ஸ் ஆகிய 3 நாடுகளிலும் நேற்று முன்தினம் திடீர் மின்தடை ஏற்பட்டது.

இந்த மின்தடை 3 நாடுகளிலும் உள்ள பெரும்பாலான நகரங்களைப் பாதித்தது.

கிட்டத்தட்ட இந்த 3 நாடுகளிலும் வசிக்கும் கோடிக்கணக்கான மக்கள் மின்சாரமின்றித் தவித்தனர். குறிப்பாக ஸ்பெயினில் மாட்ரிட், பார்சிலோனா, செவில்லே, போர்டோ, லிஸ்பன் உள்ளிட்ட தொழில் துறை மையங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

மின்தடைக்குக் காரணம் என்ன என்பது பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை.

இருப்பினும் இது ஒரு சைபர் தாக்குதலாக இருக்கலாம் என்றும் அந்நாட்டு அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதைத்தொடர்ந்து ஸ்பெயின், போர்த்துக்கல், பிரான்ஸ் நாடுகளில் அவசர அமைச்சரவைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மின்தடை எதிரொலியாக ரயில், விமான சேவைகள் முற்றிலும் முடங்கியது. பல்வேறு நகரங்களில் கடும் போக்குவரத்து நெருக்கடியும் ஏற்பட்டது. (6-8)

## லண்டனில் உடைந்த பூந்தொட்டி
### ரூ.56 லட்சத்துக்கு ஏலம் போன அதிசயம்

(லண்டன்)

இங்கிலாந்தின் லண்டன் நகரில் உள்ள ஒரு வீட்டின் தோட்டத்தில் பாழடைந்த நிலையில் ஒரு பூந்தொட்டி இருந்தது. முற்றிலும் உடைந்த பிறகும் அதை ஒட்டியபின் அலங்காரமாக வைத்திருந்தார் வீட்டின் உரிமையாளர். அவர் இறந்த பிறகு, பேரக் குழந்தைகள் பூந்தொட்டியை மீட்டு ஏலத்துக்கு அணுகியபோது தான் இதுகுறித்த சுவாரஸ்யமான விவரம் வெளியானது.

உலகப் புகழ்பெற்ற கலைஞர் ஹான்ஸ் கோப்பர் உருவாக்கிய இந்த பூந்தொட்டி 1964ஆம் ஆண்டின் அரிய கலைப் பொருளாக இருப்பது கண்டறியப்பட்டது. 4 அடி உயரமான செராமிக் தொட்டி, முதலில் வெறும் பூந்தொட்டி எனக் கருதப்பட்டது. ஆனால்



ஹான்ஸ் கோப்பரின் கையொப்பம் அடையாளம் காணப்பட்டதும் அரிதானதாக மாறியது. முதலில் 10ஆயிரம் யூரோ வரை மதிப்பிடப்பட்டது. ஏலத்தில் அமெரிக்கா, டென்மார்க் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து பலர் போட்டியிட்டனர்.

இறுதியில் அமெரிக்காவில் இருந்து ஒருவர் இந்திய மதிப்பில் 56 லட்சம் ரூபாய் கொடுத்து இந்தப் பூந்தொட்டியை வாங்கினார். ஒரு பழைய பாழடைந்த பொருளும், அதன் பின்னணி மற்றும் கலைமதிப்பால் எப்படி ஒரு பெரும் செல்வாக்கான கலையாக்கமாக மாற முடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். (6-8)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...க போர் நிறுத்தம் ......... ...திலடி நிச்சயம்!

## ...எச்சரிக்கை


றி
ண்
ள
ர்
ன்



...துங்கள் என்றும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுங்கள் என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புடினை வலியுறுத்தியதை அடுத்து இந்த அறிவிப்பு வந்தது.

இதேவேளை, புடின் ஈஸ்டர் தினத்திற்கு 30 மணிநேர போர் நிறுத்தத்தை அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (6-8)

## புதைக்கப்பட்ட கண்ணிவெடி அகப்பட்ட லொறி - 26 பேர் பலி



(அபுஜா)

நைஜீரியாவில் கண்ணி வெடியில் சிக்கிய டேங்கர் லொறி வெடித்ததில் 26 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் போர்னோ மாநிலத்தில் அரசுக்கும், பயங்கரவாத அமைப்பினருக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் இருந்து வருகிறது.

எதிரிப்படைகளை பழி வாங்குவதற்காக, பயங்கரவாதிகளால் வெவ்வேறு இடங்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு புதைக்கப்பட்டு இருந்த கண்ணி வெடியில் சிக்கிய டேங்கர் லொறி நேற்று முன்தினம் வெடித்து சிதறியது. இந்த விபத்தில், ஆண்கள் 16 பேர், பெண்கள் 4 பேர் மற்றும் குழந்தைகள் 6 பேர் என மொத்தம் 26 பேர் உயிரிழந்ததுடன் மேலும் 3 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நைஜீரியாவில் இது போன்ற விபத்துச் சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன.

கடந்த 15 ஆண்டுகளில் இத்தகைய வெடி விபத்துகளில் 40 ஆயிரம் பேர் பலியானதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. (6-8)

## பஹல்காம் குற்றவாளியாக
### பாகிஸ்தான் இராணுவத்தின் முன்னாள் வீரர்!

(காஷ்மீர்)

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் ஹாஷிம் மூசா என்பவர் பாகிஸ்தான் இராணுவத்தின் முன்னாள் சிறப்புப் படை வீரராக இருந்தவர் என்று இந்தியப் புனாய்வு அமைப்பின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஜம்மு - காஷ்மீர் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் 26 பேரைக் கொன்றவர்களின் புகைப்படங்களை, காயமடைந்தவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் வரைந்து பொலிஸார் வெளியிட்டனர்.

அவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்த சுலைமான் என்ற ஹாஷிம் மூசா மற்றும் தல்ஹா பாய் என்ற அலி பாய் என்பதும் மற்றொருவர் அனந்த்நாக் மாவட்டத்தைச் சேர்ந்த அபித் ஹுசைன் தோக்கர் என்பதும் கண்டறியப்பட்டது.

இதில், ஜம்மு -காஷ் மீரின் அனந்த்நாக்கைச் சேர்ந்த ஹுசைனின் வீட்டைப் பாதுகாப்புப் படை வீரர்கள் தண்டுவைத்து தகர்த்தனர்.

இந்த நிலையில், ஹாஷிம் மூசா குறித்த அதிர்ச்சித் தகவல்கள் தற்போது விசாரணையில் வெளியாகியுள்ளது.

ஹாஷிம் மூசா என்பவர் பாகிஸ்தான் இராணுவத்தின் சிறப்புப் படையில் பணியாற்றியவர். பாகிஸ்தான் இராணுவத்தில் இருந்து வெளிவந்த அவர், தடை செய்யப்பட்ட லஷ்கர்-ஏ-தொய்பாவில் இணைந்துள்ளார்.

கடந்தாண்டு செப்டெம்பர் மாதம் இந்தியாவுக்குள் ஊடுருவி, ஸ்ரீநகர் அருகிலுள்ள புட்காம் மாவட்டத்தில் பதுங்கியிருந்து சதித்திட்டத்தில் ஈடுபட்டு வந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

காஷ்மீரில் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயற்படும் குழுக்கள் மூலம் பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்கள் மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

மேலும் பல பயங்கரவாதிகளுக்கு பஹல்காம் தாக்குதலில் தொடர்பு இருப்பது விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (6-8)

## ஆட்சியைப் பிடித்த லிபரல் கட்சி
### கனடா பிரதமராகும் மார்க் கார்னி

(ஒட்டாவா)

அமெரிக்காவின் வர்த்தகப் போர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் நடைபெற்ற கனடா பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமராக மார்க் கார்னி பதவியேற்கவுள்ளார்.

கனடாவைக் கைப்பற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அச்சுறுத்தலுக்கு மத்தியில், நேற்று முன்தினம் வாக்குப் பதிவு நடைபெற்றது. நேற்றுக் காலை வாக்குப்பதிவு அனைத்துப் பகுதிகளிலும் நிறைவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

வாக்கு எண்ணிக்கை தொடக்கத்தில் ஆளும் லிபரல் கட்சிக்கும், கன்சர்வேட்டிவ் கட்சிக்கும் இடையே கடுமையான போட்டி நிலவியது.

இந்நிலையில் வெளியான அறிவிப்பில் லிபரல் கட்சி 167 இடங்களிலும் கன்சர்வேட்டிவ்



கட்சி 145 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, கனடாவில் வெற்றிக் கொண்டாட்டத்தில் லிபரல் கட்சியினர் ஈடுபட்டனர். லிபரல் கட்சியின் வெற்றியைத் தொடர்ந்து ஒட்டாவாவில் ஆதரவாளர்களுடன் பேசிய மார்க் கார்னி,

"அமெரிக்காவுடனான பழைய உறவு முடிந்து விட்டது. அமெரிக்கா செய்த துரோகத்தின் அதிர்ச்சியில் இருந்து நாம் மீண்டு விட்டோம். ஆனால், நாம் கற்றுக் கொண்ட பாடங்களை ஒரு போதும் மறந்துவிடக் கூடாது. நாம் நம்மை கவனித்துக் கொள்ள வேண்டும்.

மேலும் இந்த வர்த்தகப் போரில் நாம் வெற்றி பெறுவோம். அமெரிக்கா நம்மை சொந்தமாக்கிக் கொள்வதற்காக நம்மை பிளவுபடுத்த ஜனாதிபதி ட்ரம்ப் முயற்சிக்கிறார். அது எப்போதும் நடக்காது" எனத் தெரிவித்தார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் குடித்தொகை வேறுபாடுகளும், குடியடர்த்தியும், குடிப்பரம்பலும் 1871 - 2022



06

வாழ்நாள் பேராசிரியர். **பொன். பாலசுந்தரம்பிள்ளை**
முன்னாள் துணைவேந்தர். யாழ். பல்கலைக்கழகம்.

வடமாகாணத்தில் இன்று 34 பிரதேச செயலகப் பிரிவுகள் இருக்கின்றன. இப்பிரிவுகளில் தற்போதைய நிலப்பரப்பிற்குள் 2022 இலும் அதற்கு முன்னைய குடிக் கணிப்புகளிலும் உள்ள குடித்தொகை விபரங்கள் அட்டவணை IX இல் காட்டப்பட்டுள்ளன. மாவட்ட மட்டத்திலும் பார்க்கப் பிரதேசப் பிரிவுமட்டக் குடித்தொகை விபரங்கள், தளநிலைமைகளைச் சிறப்பாகக் காட்டும். இம்மாகாணத்தில் 2022இல் வவுனியா பிரதேச செயலகப் பிரிவு 13 3574 பேரைக் கொண்டு முதலிடத்திலும், நெடுந்தீவு 4111 பேரைக் கொண்டு கடைசி இடத்திலும் இருக்கின்றன.

மேலும் 9 பிரதேச செயலகப் பிரிவுகள் 50 000 இற்கும் மேற்பட்ட குடித் தொகையையும், 5 பிரதேச செயலகப் பிரிவுகள் 25 000 - 50000 இற்கும் இடைப்பட்ட குடித்தொகையையும், 19 பிரிவுகள் 25 000 இற்குக் குறை வான குடித்தொகையையும் கொண்டிருந்தன.

1911 - 1946 இற்கு இடைப்பட்ட காலத்தில் குடித்தொகை அதிகரிப்புப் பெற்ற இப்பிரிவுகளின் குடித்தொகை மிகவும் குறைவாகவே இருந்தது. ஆனால் 1946 - 2022இற்கு இடைப்பட்ட காலத்தில் இம் மாகாணத்தில் மூன்று வகையான போக்குகள் கொண்ட பிரிவுகள் காணப்பட்டன.

அவை:

(i) உயர்வான அதிகரிப்பைக் கொண்ட பெருநிலப் பிரதேச செயலகப் பிரிவுகள்

(ii) மிதமான அதிகரிப்பைக் கொண்ட குடாநாட்டுப் பிரதேச செயலகப் பிரிவுகள்

(iii) யுத்தத்தின் தாக்கத்தால் குடித்தொகை குறைந்த தீவுப் பகுதிப் பிரதேச செயலகப் பிரிவுகளும் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகப் பிரிவும்

1946 - 2022 இற்கு இடைப்பட்ட காலத்தில் குடித்தொகை அதிகரிப்புப் பெற்ற பிரதேச செயலகங்களின் குடித்தொகை வேறுபாடுகள் வீதத்தில் இறங்கு நிலையில் பின்வருமாறு: துணுக்காய் (3649%), கரைச்சி (3563%), மாந்தை கிழக்கு (2625%), வவுனியா (1822%), புதுக்குடியிருப்பு (1728%), செட்டிகுளம் (1642%), ஒட்டி சுட்டான் (1295%), கண்டாவளை (1225%), மடு (821%), வவுனியா வடக்கு (634%), வவுனியா தெற்கு (407%), பூநகரி (420%), நானாட்டான் (340%), கரைதுறைப்பற்று (304%), மாந்தை மேற்கு (263%), வடமராட்சி கிழக்கு (243%), மன்னார் (221%), பளை (210%), வலிகாமம் தெற்கு (101%), வலிகாமம் தென் மேற்கு (87%), தென்மராட்சி (81%), நல்லூர் (77%), வடமராட்சி தெற்கும் மேற்கும் (51%), வடமராட்சி வடக்கு (49%), யாழ்ப்பாணம் (31%).

பின்வரும் பிரிவுகள் 1946 இல் கொண்ட குடித்தொகையடர்த்தியிலும் பார்க்க 2022 இல் குறைவான குடித்தொகையடர்த்தியைக் கொண்டிருக்கின்றன. இவ் வீழ்ச்சிக்குப் பிரதான காரணம் யுத்த தாக்கத்தால் ஏற்பட்ட இடப்பெயர்வாகும். குடித்தொகையடர்த்தி குறைந்த பிரதேச செயலகப் பிரிவுகள் பின்வருமாறு:- தீவகம் வடக்கு (-1%), காரைநகர் (-13%), தீவகம் தெற்கு (-23%), வலிகாமம் வடக்கு (-29%), நெடுந்தீவு (-35%). வலிகாமம் வடக்கு யுத்தத்தாலும் உயர் பாதுகாப்பு வலய அமைப்பாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரிவு.

இன்றும் மக்களின் சொந்த நிலம் இராணுவத்தால் விடுவிக்கப்படாததால் மீள்குடியேற்றம் முற்றுப்பெறவில்லை. யுத்தத்தால் ஏற்பட்ட ஐந்து வருட இடப்பெயர்வாலும், குறைந்த மீள்குடியேற்றத்தாலும் தீவகப் பிரிவுகளில் குடித்தொகை யடர்த்தி குறைந்துவிட்டது. குடித்தொகை அடர்த்தி வடமாகாணத்தின் குடியடர்த்திப் பண்பைப் பார்க்குமிடத்து 1871 இல் குடித்தொகை அடர்த்தி படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. 1871இல் சதுரகிலோமீற்றருக்கு 34ஆக இருந்து, 1921இல் 48ஆகவும், 1946 இல் 58ஆகவும், 1971இல் 105 ஆகவும் 1981இல் 134ஆகவும் அதிகரித்த நிலையில் 2012இல் 128ஆக குறைந்து 2022இல் 141 ஆக அதிகரித்துள்ளது. மாகாணத்தின் குடித்தொகையடர்த்தி மாவட்ட ரீதியில் வேறுபடுகின்றன. யாழ்ப்பாண மாவட்டம் மிக உயர்வான குடித்தொகையடர்த்தி யைக் கொண்டிருக்க ஏனைய நான்கு மாவட்டங்களும் குறைவான குடியடர்த்தியைக் கொண்டுள்ளன.

**அட்டவணை X மாவட்டங்கள், குடாநாடு மற்றும் பெருநிலத்திற்குத் தேர்ந்த சில ஆண்டுகளுக்கான குடியடர்த்தி காட்டப்பட்டுள்ளது.**

பெருநிலப் பிரதேச மாவட்டங்கள் மிகவும் குறைவான குடியடர்த்தியைக் கொண்டதாக இருந்து 1971 இற்குப் பின்னரே குடியடர்த்தி மெதுவாக அதிகரித்து வருவதைக் காணமுடிகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தின் குடியடர்த்தி 1981 - 2012 இற்கு இடையில் குறைந்து மீளவும் சிறியளவில் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடியடர்த்தி சதுர கிலோமீற்றருக்கு 1981 இல் 784 ஆகவும் 2012இல் 550 ஆகவும் 2022இல் 593 ஆகவும் இருந்தது.

பெரு நிலப்பரப்பு 7214 சதுர கிலோமீற்றர் பரப்பளவானது இங்கு குடிசன வடர்த்தி 1921இல் சதுர கிலோமீற்றருக்கு 7 ஆகவும், 1946 இல் 9 ஆகவும் 1971 இல் 30 ஆக வும் 1981 இல் 48ஆகவும் 2012 இல் 65ஆகவும் 2022இல் 74 ஆகவும் அதிகரித்துள்ளது. யுத்தத் தால் யாழ்ப்பாணக் குடாநாட்டு குடியடர்த்தி 1981 - 2012 இடையில் குறைந்த பொழுதும் பெருநிலப் பகுதியில் குடியடர்த்தி அதிகரித்து வருகிறது. பெருநிலப்பகுதி நெற் செய்கையையும், மீன்பிடியையும் ஆதாரமாகக் கொண்டிருந்த பொருளாதாரம் மின்சார வசதியும், குழாய்க்கிணறு, நீர்பபாசன வசதியும் கிட்டியதால் பல்வேறு மேட்டு நிலப் பயிர்ச்செய்கை வளர்ச்சி பெற்றதுடன் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு நகரங்களில் பல்வேறு தொழில்களும் சேவைகளும் விருத்தி பெறக் குடியடர்த்தி ஏற்பட்டுள்ளது.

(தொடரும்...)

| பிரதேச செயலகப் பிரிவு | பரப்பு ச.கி.மீ | 1921 | 1946 | 1971 | 1981 | 2012 | 2022 |
|---|---|---|---|---|---|---|---|
| நெடுந்தீவு | 45.0 | 88 | 140 | 123 | 123 | 84 | 90 |
| தீவுகள் வடக்கு | 30.0 | 303 | 426 | 601 | 616 | 255 | 280 |
| காரைநகர் | 22.0 | 424 | 536 | 717 | 812 | 295 | 322 |
| தீவுகள் தெற்கு | 78.0 | 206 | 304 | 440 | 492 | 211 | 231 |
| யாழ்ப்பாணம் | 17.38 | 1611 | 2381 | 4236 | 4683 | 2930 | 3128 |
| நல்லூர் | 78.0 | 366 | 528 | 871 | 1003 | 872 | 941 |
| வலிகாமம் மேற்கு | 44.0 | 591 | 740 | 984 | 1005 | 1053 | 1136 |
| வலிகாமம் தென்மேற்கு | 45.0 | 520 | 656 | 1067 | 1259 | 1160 | 1251 |
| வலிகாமம் தெற்கு | 30.0 | 756 | 945 | 1536 | 1825 | 1754 | 1903 |
| வலிகாமம் வடக்கு | 57.0 | 536 | 792 | 1077 | 1271 | 518 | 560 |
| வலிகாமம் கிழக்கு | 122.0 | 278 | 367 | 611 | 717 | 718 | 773 |
| தென்மராட்சி | 221.0 | 188 | 173 | 282 | 324 | 293 | 315 |
| வடமராட்சி தெற்கும் மேற்கும் | 88.0 | 318 | 371 | 649 | 709 | 519 | 560 |
| வடமராட்சி வடக்கு | 29.0 | 948 | 1187 | 1363 | 1606 | 1634 | 1766 |
| வடமராட்சி கிழக்கு | 179.0 | 26 | 22 | 58 | 69 | 711 | 77 |
| பச்சிலைப்பள்ளி | 167.7 | 28 | 20 | 46 | 111 | 51 | 61 |
| கண்டாவளை | 209.7 | 11 | 10 | 53 | 73 | 110 | 132 |
| கரைச்சி | 411.0 | 2 | 5 | 63 | 114 | 149 | 179 |
| பூநகரி | 448.7 | 11 | 10 | 20 | 31 | 45 | 54 |
| மாந்தை மேற்கு | 608.0 | 7 | 8 | 23 | 31 | 24 | 28 |
| மடு | 533.0 | 2 | 2 | 8 | 12 | 14 | 16 |
| மன்னார் | 212.0 | 69 | 90 | 157 | 229 | 240 | 279 |
| நானாட்டான் | 148.0 | 29 | 40 | 97 | 124 | 120 | 140 |
| முசலி | 475.0 | 7 | 9 | 18 | 29 | 17 | 20 |
| செட்டிகுளம் | 399.1 | 4 | 5 | 29 | 53 | 75 | 85 |
| வவுனியா தெற்கு | 185.5 | 11 | 16 | 46 | 76 | 70 | 80 |

| ஆண்டு | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | குடாநாடு | பெருநிலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1871 | 252 | 9 | 11 | 4 | 3 | 446 | 9 |
| 1921 | 359 | 10 | 13 | 5 | 4 | 530 | 13 |
| 1956 | 446 | 9 | 17 | 7 | 4 | 689 | 22 |
| 1971 | 695 | 43. | 39 | 33 | 18 | 813 | 30 |
| 1981 | 795 | 69 | 57 | 52 | 32 | 1032 | 48 |
| 2012 | 628 | 91 | 53 | 92 | 38 | 994 | 65 |
| *2022 | 676 | 108 | 61 | 105 | 61 | 1090 | 75 |

மூலம்: இலங்கைக் குடித்தொகைக் கணிப்புகள், *மாவட்ட புள்ளிவிபரக் கைந்நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்களால் சூழல் மாசடைவதைத் தடுப்பதற்காக, வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்களை இடும் 18 கூடுகள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபனிடம் நேற்று முன்தினம் மாவட்டச் செயலகத்தில் வைத்து Save a Life நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரினால் கையளிக்கப்பட்டது.

(படம்-சிவசாந்தன்)

## இலங்கையில் தனது இருப்பை வலுப்படுத்தி, விற்பனை வலையமைப்பை விஸ்தரிக்கும் Hero மோட்டோர்கோர்ப் Abans Auto உடன் இணைந்து Hero Xoom ஸ்கூட்டர், 110CC அணிவகுப்பு, HF டிலக்ஸ், Xtreme 125R, Hunk 160R 4V மோட்டார் சைக்கிள்களை அறிமுகம் செய்துள்ளது

உலகின் மிகப்பெரிய மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் விற்பனை நாமமாக உலக சந்தைகளில் தனது இருப்பை வலுப்படுத்தியுள்ள Hero Motocorp தமது நவீன உற்பத்தி அணிவகுப்பை அறிமுகம் செய்துள்ளது. அதன் அடிப்படையில் HF Deluxe, Xtreme 125R மற்றும் Hunk 160R 4V மோட்டார் சைக்கிள்கள் மற்றும் Xoom 110 ஸ்கூட்டர்களைத் தனது நீண்டகால பங்காளியான Abans Auto உடன் இணைந்து இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது.

2012 ஆம் ஆண்டு தொடக்கம், Hero MotoCorp இன் தனது நம்பகமான விநியோகஸ்தரான Abans Auto உடன் இணைந்து இலங்கையில் தனது வர்த்தகத்தை






நடத்தி வருகிறது. 2025 மே மாதத்திற்குள் 500 விற்பனை நிலையங்கள் மற்றும் சேவை நிலையங்களை நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தி அதன் சமீபத்திய தயாரிப்புகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதே அதன் நோக்கமாகும். இந்த விரிவுபடுத்தலின் மூலம் இலங்கை முழுவதுமுள்ள வாடிக்கையாளர்களுக்கு அசல் உதிரிப் பாகங்கள் மற்றும் விற்பனைக்குப் பின்னரான உயர் சேவைகளை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது.

**இலங்கையில் அறிமுகமான புதிய Hero MotoCorp தயாரிப்புகள்:**

Xoom 110 (Crab Version) சிறிய மற்றும் ஸ்போர்டி தோற்றத்திலான இந்த ஸ்கூட்டர் நகரப் பகுதிகளில் உங்கள் நாளாந்த பயணத்திற்கு ஏற்ற நெகிழ்வான மற்றும் எளிமையாகச் செல்லும் அனுபவத்தையும் வழங்குகிறது. இது இலங்கையின் 110cc பிரிவில் முதல் மற்றும் ஒரே ஸ்கூட்ட ராகும்.

Hunk 160R 4V (Single Channel ABS) துடிதுடிப்பான மற்றும் வேகமான ஓட்டத்தை விரும்பும் அனைவருக்கும் செயல்திறனை அடிப்படையாக கொண்டு வடிவமைக்கப் பட்டுள் ளது.

Xtreme 125R -125cc பிரிவில் சக்தி, செயல்திறன் மற்றும் மிகவும் சிறந்த தோற்றத்துடன் வரும் இது இந்த அணிவகுப்பின் புதிய போட்டியாளராக அறிமுகமாகிறது.

HF Deluxe (All-Black Edition) - நம்பகமான மற்றும் அதிரடியான தோற்றத்துடன் கூடிய இந்த மோட்டார் சைக்கிள், மிகவும் சிறந்த ஓட்டத்தை தருகிறது.

விலை:

Xoom 110*- ரூ. 699, 900
Xtreme 125R- ரூ. 776, 900
HF Deluxe*-ரூ . 577,900
Hunk 160R 4V- ரூ. 909,900

விரைவில் Abans Auto விற்பனை முகவர்களிடம் மிகவும் விரைவாக பெற்றுக்கொள்ள முடியும்.

**Xoom 110 Carb Version**

Hero Xoom 110. இலங்கை ஸ்கூட்டர் சந்தைக்கு புதிதாக அறிமுகமாகும் ஸ்போர்ட்டி தோற்றத்தைக் கொண்ட வடிவமைப்பாகும். அதன் Aerodynamic வடிவமைப்பு, LED முன்கதிர் விளக்குகள், தனித்துவமான H-tbt வடிவ பின்பக்க விளக்குகள் மற்றும் Bold Color Palette. மூலம் கவர்ந்திழுக்கும் தோற்றத்தைத் தருகிறது. உங்கள் நாளாந்தப் பயணத் தேவைகளுக்கு இளம் நகர்ப்புற மக்களுக்கு இது ஒரு ஸ்டைலான ஸ்கூட்டராக அமையும்.

இந்த ஸ்கூட்டர், 110cc ஏர்-கூல்டு என்ஜின் மற்றும் கார்புரேட்டர் அமைப்புடன் இயக்கப்படுகிறது. நகரப்புற பயணங்களுக்கு ஏற்ற சுறுசுறுப்பான செயல்திறன் மற்றும் விரைவான வேகமாற்றங்களைக் கொண்டுள்ளது. Hero இன் தனியுரிமை பெற்ற i3S தொழில்நுட்பத்துடன் அதிக எரிபொருள் சேமிப்பை உறுதி செய்கிறது. CBS கொண்ட முன்புற டிஸ்க் பிரேக் கொண்டுள்ளதோடு, முன்புற சஸ்பென்ஷனுடன் உறுதியாக கையாளக் கூடிய வகையில் உள்ளது. டிஜிட்டல் ஸ்பீடோமீட்டர், இருக்கை அடியில் மிகப்பெரிய இடவசதி மற்றும் எடை குறைவான கட்டமைப்பைக் கொண்டுள்ளது. Xoom 110 இலங்கையில் நகர்ப்புற பயணிகளுக்கான மிகவும் சிறந்த தேர்வாக இது அமைகிறது.

**HF Deluxe**

Hero HF Deluxe மோட்டார்சைக்கிள் புதிய All-Black மாதிரிகள், Bold Graphics கருப்பு அலாய் வீல்கள் மற்றும் நவீன தோற்றத்துடன் இலங்கை சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நிறைவான தோற்றம் மற்றும் மிகுந்த நம்பிக்கையுடன் உங்கள் அன்றாடப் பயணங்களை மிகவும் எளிதாக மேற்கொள்ள முடியும். சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த மோட்டார் சைக்கிளில் வசதியான இருக்கை, ஸ்டைலான ஹெட்லைட் சிஸ்டம் மற்றும் வண்டியின் நிறத்துடன் பொருந்திய கண்ணாடிகள் இதற்கு கவர்ச்சிகரமான தோற்றத்தைத் தருவதோடு நகர்ப்புற மற்றும் கிராமப்புற பயணர்களுக்கு சிறந்த அனுபவத்தை நிச்சயமாக வழங்கும்.

HF Deluxe மோட்டார்சைக்கிளில் 97.2CC ஏர்-கூல் 4 Stroke எஞ்சின் இதில் பொருத்தப்பட்டுள்ளதோடு, இது சிறந்த எரிபொருள் செயல்திறனை வழங்குகிறது.

**Xtreme 125R**

Xtreme 125R என்பது ஒரு செயல் திறன்மிக்க மோட்டார்சைக்கிளாகும். இது ஸ்போர்ட்டியான மற்றும் சுறுசுறுப்பான அம்சங்களை ஒருங்கிணைத்த ஆரம்பநிலை மோட்டார்சைக்கிளாகும். 125CC சக்திவாய்ந்த எஞ்சின் மூலம் இது இயக்கப்படுவதோடு, 11.4 bhp வேகத்தில் எக்ஸிலரேட்டர் செய்யும் போது மணிநேரத்திற்கு 66 கிமீ வேகத்தில் சிறந்த எரிபொருள் சேமிப்புத் திறனை கொண்டுள்ளது. இந்த வரிசையில் கவர்ச்சிகரமான நிறைவைக் கொண்டுள்ள இந்த Xtreme 125R LED விளக்குகளைக் கொண்ட முதல் மோட்டார் சைக்கிள் மாதிரியாகும். புளுடூத் இணைப்பு மற்றும் LCD திரையின் ஸ்மார்ட் கனெக்டிவிட்டியை எளிதாக அனுபவிக்க முடியும்.


இது ஒரு இலகுரக டயமண்ட் பிரேம், 120/80 பின்புற டயர்கள் மற்றும் 37mm Showa முன்புற சஸ்பென்ஷன் ஆகியவற்றை இது கொண்டுள்ளது. இது மோட்டார் சைக்கிளைக் கையாள எளிதானது மற்றும் சவாரி செய்வதற்கு வசதியானது. Single Channel ABS மூலம் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. அதே நேரம் 276 mm முன்பக்க டிஸ்க் பிரேக், அபாய எச்சரிக்கை விளக்குகள் போன்றவை எந்தச் சாலையிலும் சவாரி செய்யும் போது அதிகபட்ச பாதுகாப்பை வழங்குகிறது.

**Hunk 160R 4V**

Hero Hunk 160R 4V என்பது மஸ்குலர் ஸ்ட்ரீட் ஃபைட்டர் பைக் ஆகும். இது தைரியமும், வீரமும் நிறைந்த தோற்றத்துடன் வருகிறது. கவர்ச்சிகரமான தாங்கி, முழுமையான LED விளக்குகள், கவர்ந்திழுக்கும் உடல் வடிவமைப்பு மற்றும் ஸ்போர்ட்டி ஸ்பிளிட் சீட் ஆகியவை நகர்புற வீதிகளில் பயணிக்கும் போது கண்டிப்பாக அனைவராலும் ஈர்க்கப்படும். கவர்ச்சிகரமான வர்ணங்கள் மற்றும் பிரீமியம் தோற்றத்துடன் வரும் இந்த மோட்டார் சைக்கிள் புதிய தலைமுறையினரின் சிறந்த தேர்வாக அமையும்.

Hero MotoCorp இந்தியாவின் புது டில்லியை தலைமையிடமாகக் கொண்டுள்ளது. தொடர்ச்சியாக 24 வருடங்கள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர் தயாரிப்பில் உலகின் மிகப்பெரிய உற்பத்தியாளராக Hero MotoCorp திகழ்ந்து வருகிறது. இதன் தயாரிப்புகள் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா உட்பட 48 நாடுகளில் 120 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர். மேலும், ஹீரோவால் உற்பத்தி செய்யப்படும் புத்தம் புதிய சுற்றுச்சூழல் நட்புறவுமிக்க இலக்ட்ரிக் மோட்டார்சைக்கில் VIDA என்ற பெயரில் தயாரிக்கப்படுகிறது. Hero MotoCorp என்பது Ather Energy மற்றும் Euler Motors இல் மூலோபாய முதலீடு மூலம் Harley-Davidson மற்றும் zero Motorcycles ஆகியவற்றின் கூட்டுறவில் இயங்கி வருகிறது.

## 'உள்ளக அலுவல்கள் அலகு'
### யாழ்.மாவட்ட செயலகத்தில் திறப்பு



(யாழ்ப்பாணம்)

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை முறையிடுவதற்கு 'உள்ளக அலுவல்கள் அலகு' எனும் பிரிவானது நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபனால் மாவட்டச் செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

அதேவேளை யாழ். மாவட்ட செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப் பிரிவின் இணைப்பாளராக திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரநாதன் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பிரதம பொறியியலாளர், உதவி மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

## முத்துராஜா யானையை மீள இலங்கைக்கு வழங்க முடியாது

(தாய்பே)

2023 ஆம் ஆண்டு தாய்லாந்தினால் பொறுப்பேற்கப்பட்ட முத்துராஜா யானையை இலங்கைக்கு மீண்டும் வழங்காதிருக்க அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த யானை தாய்லாந்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டு கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில், மீண்டும் தாய்லாந்து அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது.

அளுத்கம, கந்த விகாரையின் பாதுகாப்பில் இருந்த போது ஏற்பட்ட காயங்களினால் இந்த யானை தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் பராமரிப்பில் வைக்கப்பட்டது.

பின்னர் முத்துராஜா யானை 2023 ஆம் அண்டு தாய்லாந்துக்கு சிகிச்சைக்காக திருப்பி அனுப்பப்பட்டது.

இந்த நிலையில் முத்துராஜா யானையை இலங்கைக்கு மீண்டும் வழங்காதிருக்க தாய்லாந்து அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும் இலங்கைக்கு வழங்கப்பட்ட மற்ற யானைகள் குறித்தும் தாய்லாந்து அரசாங்கம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-8)

## நேருக்கு நேர் மோதி இரண்டு பேருந்துகள் விபத்து
### 30 பேர் காயம்



(கொழும்பு)

பெலியத்த பொலிஸ் பிரிவின் ஹெட்டியாராச்சி வளைவில் தனியார் பேருந்து ஒன்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் சுமார் 30 பேர் காயமடைந்து பெலியத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பெலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 759



ஆழ்வார்க்கடியானும், வந்தியத்தேவனும் இந்தப் பேச்சுகளையெல்லாம் காது கொடுத்துக் கேளாதவர்கள் போல் கேட்டுக் கொண்டு ஊரைத் தாண்டிப் போனார்கள். ஊருக்குள் எங்கேயும் இரவு தங்க அவர்கள் விரும்பவில்லை. ஊருக்கு அப்பால் சமீபத்தில் எங்கேயாவது பாழடைந்த மண்டபம் அல்லது சத்திரம் சாவடி இல்லாமலா போகும்? அப்படியில்லாவிட்டால், இரவு வீரநாராயணபுரத்துக்குப் போய்த் தங்கி விடுவது நல்லது. அங்கேயுள்ள பெரிய பெருமாள் கோயிலின் நூற்றுக்கால் மண்டபத்தில் நிம்மதியாகப் படுத்து உறங்கலாம். முதல் நாள் இரவு நிகழ்ச்சிகளுக்குப் பிறகு ஓர் இரவு நல்ல தூக்கம் அவர்களுக்கு அவசியமாயிருந்தது. கடம்பூரைத் தாண்டிச்சாலையோடு சிறிது தூரம் சென்றதும் அடர்த்தியான மூங்கில் காடு ஒன்றும் அதற்குள் ஐயனார் கோவில் ஒன்றும் தெரிந்தன.

"வைஷ்ணவரே! இனிமேல் என்னால் நடக்க முடியாது. இரவு இந்தக் கோயிலில் படுத்திருக்கலாம். யார் கண்ணிலும் படாமலிருப்பதற்கு இது நல்ல இடம்!" என்றான் வந்தியத்தேவன்.

"அப்பனே! நீ சொல்வது தவறு. இம்மாதிரி இடங்களுக்கு நம்மைப்போல் இன்னும் யாராவது வந்து சேர மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அப்படி வருகிறவர்கள் குதிரைகளுடன் வந்தவர்களானால் ரொம்ப நல்லது" என்றான் வந்தியத்தேவன்.

"இந்த மூங்கில் காட்டுக்குள் எந்தக் குதிரையும் நுழைய முடியாது. மனிதர்கள் நுழைந்து செல்வதே கடினமான காரியம் ஆயிற்றே!"

"எங்கேயாவது ஒற்றையடிப் பாதை ஒன்று இல்லாமற் போகாது. கோயில் பூசாரி வரக்கூடிய வழியேனும் இருந்துதானே ஆகவேண்டும்?"

இருவரும் அடர்த்தியாக மண்டிக் கிடந்த மூங்கில் புதர்களைச் சுற்றிச் சுற்றி வந்து, கடைசியாகக் குறுகலான ஒற்றையடிப் பாதை ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். அதன் வழியாக உடம்பில் முட்கள் கீறாமல் நடந்து போவது மிகவும் பிரயாசையாக இருந்தது. இவ்விதம் சிறிது தூரம் சென்ற பிறகு கொஞ்சம் இடைவெளி காணப்பட்டது. அதில் சிறிய ஐயனார் கோவில் இருந்தது. கோவிலுக்கு எதிரே பலி பீடமும் அதையொட்டி மண்ணினால் செய்து காளவாயில் சுடப்பட்ட யானைகளும் குதிரைகளும் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. ஐயனாருக்கு வேண்டுதல் செய்து கொள்ளும் பக்தர்கள் இவ்விதம் மண்ணினால் செய்த குதிரைகளும் யானைகளும் கொண்டு வந்து வைப்பது வழக்கம்.


அவற்றைப் பார்த்ததும் வந் தியத்தேவன், "குதிரைகளைப் பற்றி இவ்வளவு கவலைப் படுகிறோமே? ஐயனாரைக் கேட்டு இரண்டு குதிரைகள் வாங்கிக் கொள்ளலாமே?" என்றான். "மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கக் கூடாது என்ற பழமொழி தெரியாதா!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"வைஷ்ணவனே! எங்கள் ஐயனார் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம். கேட்ட வரத்தை உடனே கொடுக்கக்கூடியவர், உங்கள் விஷ்ணுவைப் போல் பக்தர்களைத் தவிக்க விட்டுப் பட்டப் பகலில் தூங்கிக் கொண்டிருப்பவர் அல்ல!" என்றான் வந்தியத்தேவன். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தங்கக் காசு!



இரவு சுமார் பதினொன்றரை மணி இருக்கும். பேருந்து சிதம்பரத்திலிருந்து சென்னையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சுமார் பத்துப் பயணிகள் இருந்தனர். அவர்களுடன் நடத்துநரும் சேர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். பேருந்து புவனகிரியைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தது. பயணிகளில் ஐவர் எழுந்தனர். மறைத்து வைத்திருந்த கத்தியையும் துப்பாக்கியையும் வெளியே எடுத்தனர். ஒருவன் ஓட்டுநரின் முதுகில் கத்தியை வைத்து அழுத்தினான். அவர் மிரண்டு போனார். "ஐயா, என்னை ஒன்றும் செய்து விடாதே நீ சொன்னபடி கேட்கிறேன். என்னை உயிரோடு விட்டு விடு சாமி," என்றார். பயணிகளும் நடத்துநரும் குறட்டை விட்டு தூங்கிக் கொண்டிருந்தனர். ஒரு வன் நடத்துநரின் நெஞ்சுக்கு நேராகத் துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்தான்.

"சத்தம் போட்டால் தொலைத்து விடுவேன். ஜாக்கிரதை" மெல்லிய குரலில் சொன்னான். நடத்துநர் நிலைமையை நன்றாக அறிந்தார். ஓட்டுநரைப் பார்த்தார். அவர் முதுகில் கத்தி பாயத் தயாராய் இருந்தது. "சாமி எனக்கு மனைவியும் இரண்டு பிள்ளைகளும் உள்ளனர். நீ என்ன சொல்கிறாயோ அதைச் செய்ய நான் தயார். என்னை விட்டு விடப்பா!" பயணிகள் விழித்து விடக் கூடாதல்லவா அதனால் அவர் மிக மெதுவாகச் சொன்னார். அவர்கள் யாரும் விழித்துக் கொள்ளவில்லை. நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். நடத்துநர் தன் கையிலிருந்த பணப்பையையும் திருடனிடம் ஒப்படைத்தார். ஏ எல்லாரும் இரண்டு கையையும் மேலே தூக்குங்க கையில் கழுத்தில இருக்கிற நகைகளை எல்லாம் கழற்றி பக்கத்தில் வைங்க. சத்தம் போட்டா சுட்டுப் பொசுக்கிடுவேன், உரத்த சத்தமாய்க் சுத்தினான் திருடன்.

பேருந்தில் இருந்த ஒரு சிறுவன் உட்பட அனைவரும் கண்ணைக் கசக்கிக் கொண்டு விழித்தனர். எதிரில் திருடன்: அவன் கையில் துப்பாக்கி வைத்து கை ஆட்காட்டி விரல் துப்பாக்கி விசையை அழுத்த தயாராய் இருந்தது. இக்கட்டான நிலையை அறிந்து கொண்ட இரு பெண்கள் உட்பட அனைத்துப் பயணிகளும் தங்கள் தங்கச் சங்கிலிகள், வளையல்கள், மோதி ரங்கள் அனைத்தையும் கழற்றிப் பக்கத்தில் வைத்தனர்.

திருடன் துப்பாக்கியை நீட்டியபடி வந்து எல்லா தங்க நகைகளைகளையும் எடுத்துத் தன் பையில் வைத்தான். பின்னர் ஐவரும் பேருந்தை நிறுத்தி இறங்கத் தயாராயினர். "ஐயா, என்னிடம் ஒரு தங்கக்காசு இருக்கிறது. அதையும் பெற்றுக் கொள்ளுங்கள்," என்றான் சிறுவன், இதைக் கேட்ட ஐந்து திருடர்களும் அதிசயித்து நின்றனர்.

"ஐயா, இன்று நான் தனியாகப் பயணம் செய்து கொண்டிருக்கிறேன். என் தாயாரும் தந்தையும் ஊரில் இருக்கின்றனர். எப்போதும் நீ உண்மையே பேச வேண்டும் என்று என் தாய் அடிக்கடி கூறுவார். நான் எப்போதும் உண்மையே பேசுவேன். நான் முத லிடம் வாங்கியதால் எனக்கு இந்த தங்க டொலரைப் பரிசாகத் தந்துள்ளனர். இதன் மதிப்பு ஆயிரம் ரூபாய். நான் இதை உங்களிடம் தருகிறேன் ஏற்றுக் கொள்ளுங்கள்." என்றான் அவன்.

"தம்பி நீ உண்மை பேசும் உத்தமன் என்பதை நிரூபித்துவிட்டாய். உன்னை எப்படிப் பாராட்டுவது என்று தெரியவில்லை. அந்த தங்க டொலர் எங்களுக்கு வேண்டாம். நீயே வைத்துக்கொள்" என்றான் ஒரு திருடன்.

"ஐயா! நீங்கள் அப்படிச் சொல்லவேண்டாம். இந்தப் பயணிகள் அனைவரும் உண்மையாகவே தங்களிடம் இருந்த எல்லா தங்க நகைகளையும் தந்து விட்டனர். நான் மட்டும் தராமல் இருந்தால் எப்படி? தயவு செய்து பெற்றுக் கொள்ளுங்கள்," என்றான்.

அச்சிறுவனின் பேச்சு அந்த ஐந்து திருடர்களின் மனதை பாதித்தது. அவர்கள் மனம் மாறினர். கொள்ளையடித்த எல்லாப் பொருட்களையும் அவரவரிடம் ஒப்படைத்தனர். நடத்துநர் தன் பணப்பையைப் பெற்றுக் கொண்டார்.

உண்மையை பேசி தங்கள் உடைமைகளை மீட்டுத் தந்த அந்தச் சிறுவனை அனைவரும் பாராட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான எண்ணங்களால் மனம் நிறைந்திருந்தால், நான் செய்யும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியைத் தரும். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# எங்கள் நிர்வாகத்தை யாரிடம் சொல்லி அழுவது

நிர்வாகம் என்ற சொற்பதம் தனித்து வினைத்திறனான செயற்பாட்டுடன் மட்டும் நின்று விடுவதில்லை.

மாறாக, அதற்குள் மற்றவர்களின் சூழ்நிலைகளும் அவர்களின் மனநிலைகளும் உள்ளடங்கியுள்ளன.

எனினும் இதனைப் பலரும் புரிந்து கொள்ளாமல், வெறும் கோவைகளுடனும் கடிதங்களுடனும் சுற்றுநிருபங்களுடனும் நிர்வாகம் மட்டுப்படுத்தப்படுவதாக எண்ணிக் கொள்கின்றனர்.

இதற்குப் பல உதாரணங்களை முன்வைக்க முடியும், அதில் ஒன்று விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் தொடர்பில் வலயக்கல்வித் திணைக்களங்கள் இணைய வழியில் தரவுகளையும் தகவல்களையும் பதிவேற்றம் செய்து வருகின்றன.

இதற்காக சம்பந்தப்பட்ட அதிபர், ஆசிரியர்களின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் அதேபோன்று திருமணச் சான்றிதழின் மூலப்பிரதி, பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் என்பன கோரப்பட்டிருந்தன.

மிகக் குறுகிய கால அவகாசத்துடன் கோரப்பட்ட மேற்படி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதில் அதிபர், ஆசிரியர்கள் படாப்பாடு பட்டனர்.

அநேகமான பிரதேச செயலகங்களில் உள்ள பதிவாளர் பிரிவுகள் வரிசை கட்டத் தொடங்கி விட்டன.

ஆம், பிறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதேச செயலகங்களில் நீண்ட வரிசை.

இது ஒருபுறமிருக்க, மூலப் பிரதிகளுக்கான விண்ணப்பங்கள் அதிகரித்திருக்கும் போது, அதற்கேற்றாற்போல் உத்தியோகத்தர்களை மேலதிகமாக ஈடுபடுத்தி, வழங்கிடங்களை (Counter) ஏற்பாடு செய்து தேவையை விரைந்து நிறைவேற்றிக் கொடுப்பதற்குப் பிரதேச செயலகங்கள் தயாரில்லாத நிலைமையையும் பார்க்க முடிந்தது.

சரி, இவை மட்டும்தான் என்றால், அது தான் இல்லை.

பிறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை அண்மையிலுள்ள பிரதேச செயலகங்களில் இணைய வழி மூலம் பெற்றுக் கொள்வதற்குச் சென்றால், சில மூலப்பிரதிகளை இணைய வழியில் பெற முடிந்தது.

இன்னும் சில மூலப்பிரதிகளை இணைய வழியில் பெற முடியவில்லை. அவை இன்னமும் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படவில்லை என்பதால், பிறப்பு அல்லது திருமணம் நடந்த இடத்துப் பிரதேச செயலகத்திலேயே அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இதில் வேடிக்கை என்னவெனில், 20 வருடங்கள் கடந்த திருமணப் பதிவுகள் கூட இன்னமும் இணைய வழிப் பதிவேற்றத்துக்கு உட்படவில்லை.

இதன் காரணமாக சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்துக்குச் செல்கின்ற அலைச்சல் மேலதிகமாயிற்று.

இங்குதான் சான்றிதழ்களின் மூலப்பிரதி என்று நிர்வாகம் கடிதம் அனுப்பிவிட, சம்பந்தப்பட்டவர்கள் ஆற்றலைகின்ற பரிதாபம்.

இதிலிருந்தேனும் நிர்வாகம் என்பது மற்றவர்களின் கஷ்ரநஷ்ரங்களையும் அறிந்து செய்யப்படுவது என்ற உண்மை உணரப்படுவதாக.

# யாழ்ப்பாணம் ஜனாதிபதி மாளிகை உட்பட ஏழு மாளிகைகளை விடுவிக்கத் திட்டம்

## அமைச்சர் சந்தன அபேரத்ன தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஜனாதிபதி மாளிகை உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள ஏழு ஜனாதிபதி மாளிகைகளை விடுவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகப் பொது நிர்வாகம், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அவர் கொழும்பு, கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகைகளினை அரசாங்கத்தேவைகளுக்காக உபயோகித்துக் கொண்டு ஏனையவற்றினைப் பொருளாதார ரீதியில் பயனுள்ள வகையில் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

ஜனாதிபதி மாளிகைகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்வது தொடர்பில் பல்வேறு தரப்புகளிடம் இருந்தும் பத்திற்கு மேற்பட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பிரதானமாக யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பாவனைக்குப் பெற்றுக் கொள்வதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையை சுற்றுலா நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் யோசனையும் எம்மிடம் உள்ளது. இவை தொடர்பில் நாம் பரிசீலித்து வருகின்றோம் என்றார்.

அத்துடன் அநுராதபுரம், கதிர்காமம், மகியங்கனை, எம்பிலிப்பிட்டி, பெந்தோட்டைப் பகுதிகளில் உள்ள ஜனாதிபதி மாளிகைகளும் அரசாங்கப் பயன்பாட்டிற்கு தேவையற்றதாகவுள்ளமையால் அவையும் விடுவிக்கப்படும் என்றார்.

யாழ்ப்பாணம் ஜனாதிபதி மாளிகை, சடையம்மா மடம் ஆகியன விடுவிக்கப்பட வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றம் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# வழிப்பறியில் ஈடுபட்ட இராணுவ சிப்பாய் போதைவஸ்துடன் கைது

வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் பண்டாரகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா - ஹெய்யன்துடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வழிப்பறிகளில் ஈடுபட்ட இராணுவச் சிப்பாய் தொடர்பில் பண்டாரகம பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் கிதெல்பிட்டியப் பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றினை வழிமறித்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரான குறித்த இராணுவச் சிப்பாய் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 6,230 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாரின் விசாரணையில் சந்தேக நபரான இராணுவச் சிப்பாய் சபுகஸ்கந்த, மீகஹவத்தை, களனி மற்றும் பண்டாரகம உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர் பல்வேறு பிரதேசங்களில் வழிப்பறி கொள்ளையிட்டதாகக் கூறப்படும் தங்க நகைகளும் இரத்மலானை மற்றும் கடுவலை ஆகிய பிரதேசங்களில் உள்ள நகை அடகுக் கடைகளிலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சமீப காலமாக நாட்டில் இடம்பெறும் பல குற்றச் செயல்களுடன் இராணுவத்தினர் தொடர்ச்சியாக தொடர்புபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# திரைப்படப் பாணியில் படுகொலை முயற்சி

## நால்வர் பொலிஸாரால் கைது

(களுத்துறை)

திரைப்படப் பாணியில் நபரொருவரைப் படுகொலை செய்ய முயற்சித்த நால்வர் களுத்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி களுத்துறை பண்டாரகம பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவர் கூரிய கத்திகளால் தாக்கப்பட்டு படுகாயமடைந்திருந்தார்.

சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பாணந்துறை, பயாகலை, பண்டாரகம, ஊரகஹ பிரதேசங்களைச் சேர்ந்த நான்கு பேரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

குறித்த நால்வரும் திரைப்படப் பாணியில் களுத்துறைப் பிரதேசத்தில் ஒப்பந்த அடிப்படையில் அடிதடி, படுகொலை முயற்சிகள், வாள்வெட்டுத் தாக்குதல் போன்ற அடாவடிகளில் ஈடுபட்டமையும் பிரதேச வர்த்தகர்களை அச்சுறுத்திக் கப்பம் பெற்று வந்துள்ளமையும் பொலிஸாரது ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

# சாவகச்சேரி நீதிமன்றில் பகிரங்க ஏல விற்பனை

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் சனிக்கிழமை (03) காலை 9 மணிக்கு மணல் மற்றும் கற்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ் ஏலத்தில் கலந்து கொள்ளவுள்ளவர்களுக்கான அறிவுறுத்தல்கள் நீதிமன்றால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் ஏல விற்பனையில் கலந்து கொள்ள இருப்பவர்கள் அன்றையதினம் அரை மணித்தியாலத்திற்கு முன்பு விற்பனைப் பொருட்களான மணல், கல் என்பவற்றைப் பார்வையிடலாம்.

பொருட்கள் ஏலத்தில் கோருபவர்கள் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணத்துடன் சமூகமளிக்க வேண்டும்.

ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை நீதிபதிக்கு மட்டுமே உண்டு.

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ப பணத்தினை உடனடியாகச் செலுத்தி பொருட்களினைப் பெற்றுக் கொள்ள முடியும். காசோலைகள் மூலமாகக் கொடுப்பனவுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மணலினை அன்றைய தினமே மாலை 4.30 மணிக்கு முன்பு நீதிமன்ற வளாகத்தை விட்டு எடுத்துச் செல்ல வேண்டும் என்றுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு–கேது பெயர்ச்சி பலன்கள்

## 26.04.2025–12.11.2026 வரை



இதுவரை உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், 26.4.2025 அன்று 9 ஆம் இடத்திற்கு வரப்போகிறார். அதே நேரத்தில் கேது பகவான் உங்கள் இராசிக்கு வெற்றிகள் ஸ்தானமான 3 ஆம் இடத்திற்கு வருகிறார். பாக்கிய ஸ்தானத்திற்கு வரும் ராகுவால் பலவித வழிகளிலும் உங்களுக்கு நன்மைகள் வந்து சேரும். இந்த நேரத்தில் ராகு, சகல பாக்கியங்களையும் காது.

**குரு சாரத்தில் ராகு சஞ்சாரம் (26.04.2025 முதல் 31.10.2025 வரை)**

பூரட்டாதி நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, கல்யாண வாய்ப்புகள் கைகூடும். கடல் தாண்டிச் சென்று பணிபுரியும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.

துணிவும், தன்னம்பிக்கையும் கொண்டு செயற்பட்டு மற்றவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள். சொத்துக்கள் வாங்குவதும் விற்பதும் கைவந்த கலையாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குத் திடீரென இடமாற்றம் வரலாம்.

**சுய சாரத்தில் ராகு சஞ்சாரம் (1.11.2025 முதல் 9.7.2026 வரை)**

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம் (26.4.2025 முதல் 27.6.2025 வரை)**

உத்தரம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் போது, இக்காலத்தில் நிம்மதி கொஞ்சம் குறையலாம். நேசித்தவர்களிடம் கூட யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகலாம். குடும்பத்தில் அமைதி குறையும். குடும்பத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்பட்டால் தான் ஒற்றுமை நீடிக்கும். பிறரை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்க வேண்டாம். சொல்லைச்




ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் வளர்ச்சிக்கு மூலதனம் கிடைக்கும். போட்டிக் கடை வைத்தோர் விலகுவர். பொதுவாழ்வில் நல்ல பொறுப்புகள் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகிப் பரவசப் படுத்தும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதிப் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். வியாபாரத்தில் வந்த இடையூறுகள் அகலும், வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

6.3.2026 அன்று மீன ராசிக்கு சனிப்பெயர்ச்சியாகி செல்கிறார். உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சனி வரும் பொழுது கர்ம ஸ்தானம் பலப்படுகிறது. எனவே பெற்றோரின் உடல் நலத்தில் கவனம் தேவை. ஆரோக்கிய சீர்கேடுகளும், மருத்துவச் செலவும் உண்டு.

# ஒன்பதாம் இடத்தில் இராகு பொன்பொருள் குவியும் பாரு!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

உங்களுக்கு வழங்குவார்.

9 ஆம் இடத்திற்கு வரும் ராகுவால் ஒப்பற்ற நற்பலன்கள் வரப்போகிறது. 1 1/2 ஆண்டு காலங்கள் அங்கு சஞ்சரிக்கும் ராகுவால் தொழில் வளர்ச்சி திருப்தி தரும். பெற்றோரின் வாயிலாகவும், நண்பர்கள் வாயிலாகவும் போதுமான பொருளாதாரம் கிடைக்கும். புனித பயணங்கள் அதிகரிக்கும். கற்றவரும், மற்றவரும் பாராட்டும் விதத்தில் ஒரு நல்ல காரியமொன்றை செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சம்பள உயர்வின் காரணமாகக் குடும்பத்தை விட்டு பிரிந்து சென்று அயலூரில் பணிபுரியும் சூழல் உருவாகும்.

3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் முன்னேற்றத்தில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். பிள்ளைகளாலும், பிறராலும் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பாகப்பிரிவினைக்கு இதுவரை சம்மதிக்காத உடன்பிறப்புகள் இப்பொழுது சம்மதிப்பர். உங்களுக்குரிய பங்கு, கைக்குக் கிடைத்தாலும் அந்த இடத்தை விற்றுவிட்டு புதிய இடம் வாங்குவதிலேயே குறிக்கோளாக இருப்பீர்கள். வருமானம் வருவதில் தடை இருக்

ராகு சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது மனதில் இனம்புரியாத பலம் உருவாகும். எதிர்மறை சிந்தனைகள் அதிகரிக்கும். எந்தக் காரியத்தையும் முடிவெடுத்த பிறகு பின்வாங்கி விடுவீர்கள். தைரியமும், தன்னம்பிக்கையும் குறையும். வீடு மாற்றம் விருப்பம் போல் அமையாது. பிறருக்கு வாங்கிக் கொடுத்த தொகையால் பிரச்சினை அதிகரிக்கும். உத்தியோகத்தில் நீண்ட தூரத்திற்கான மாறுதல் வந்து நிலைகுலைய வைக்கும்.

**செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சாரம் (10.7.2026 முதல் 12.11.2026 வரை)**

அவிட்ட நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, இளைய சகோதரத்தோடு இருந்த பகை மாறும், எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். சொத்து விற்பனையால் வரும் இலாபத்தைக் கொண்டு வாங்கிய கடனை அடைப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். இடம், வீடு, வாகனம் போன்றவை வாங்குவதற்கு சலுகைகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள்.

செயலாக்கிக் காட்ட முடியாது. அரசு வழிசிக்கல்களுக்கு ஆளாக நேரிடும். துணிவும், தன்னம்பிக்கையும் குறையும்.

**சுக்ர சாரத்தில் கேது சஞ்சாரம் (28.6.2025 முதல் 5.3.2026 வரை)**

பூரம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, நீண்ட தூர பயணங்கள் ஏற்படும். இடமாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் மட்டுமின்றி தொழில் மாற்றமும் உருவாகலாம். விலகிக் கொள்வதாக அச்சுறுத்திக் கொண்டிருந்த பங்குதாரர்களை விலக்கி விட்டு, தொழிலில் புதிய பங்குதாரர்களை சேர்த்துக்கொள்ள முன்வருவீர்கள். சுபச்செலவு அதிகரிக்கும்.

மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்போடு உத்தியோகத்தில் புதிய இடத்தில் சேர முயற்சிப்பீர்கள்.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம் (6.3.2026 முதல் 12.11.2026 வரை)**

மகம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். ஆலய வழிபாட்டில்

அதே நேரத்தில் தொழில் வளர்ச்சியில் இருந்த இடையூறு அகலும். புதிய தொழில் தொடங்க நினைப்பவர்களுக்கு அனைத்து வழிகளிலும் அனுகூலம் கிடைக்கும். போட்டிப் பந்தயங்களில் வெற்றி கிடைக்கும் நேரம் இது. பொருளாதாரம் ஏற்ற இறக்கமாக இருக்கும்.

**குருப்பெயர்ச்சி காலம்**

ராகு- கேது பெயர்ச்சி காலத்தில் குருப்பெயர்ச்சி நிகழ்கிறது. வருகிற 11.5.2025 அன்று குரு பகவான், மிதுன ராசிக்கு பெயர்ச்சியாகிறார். அப்போது அதன் பார்வை பலத்தால் பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். தடைப்பட்ட திருமணம் தானாக நடைபெறும் வாய்ப்பும் உண்டு. பங்காளிப் பகை மாறும். இதுவரை உங்கள் மீது பாசம் காட்டாத பெற்றோர் இப்பொழுது பாசம் காட்டுவர். பணத்தேவை பூர்த்தியாகவும் வழிவகுத்து கொடுப்பர். குடும்ப முன்னேற்றம் கூடும். ஒக்டோபர் 8 ஆம் திகதி குரு பகவான், அதிசாரமாக கடக ராசிக்கு பெயர்ச்சியாகிறார். அப்போது அதன் பார்வை பலத்தால் உத்தியோக மாற்றம் உறுதியாகலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டமா அதிபரி...

வின் அறிக்கை ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி ஜனாதிபதி அலுவலகத்தினால் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

25 ஆண்டுகளுக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கை தொடர்பில் அடுத்த கட்ட முன்னெடுப்புகளை மேற்கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## உயிர் அச்சுறுத்...

மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

உங்களில் யாருக்காவது கொலை மிரட்டல் விடுக்கப்பட்டால் கவனமாக இருந்து கொள்ளுங்கள்.

அண்மைக்காலங்களில் இறந்தவர்களில் பலர் தங்களுக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறியிருந்தார்கள்.

அவர்கள் ஏதாவது தகராறுகளுடன் தொடர்புடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் கவனமாக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

அவர்கள் ஆயுதங்களை வைத்திருக்கக்கூடாது. அவ்வாறான உயிர் அச்சுறுத்தல் உள்ளவர்கள் இலங்கையை விட்டு வெளியேறலாம் அல்லது வீடுகளை விட்டும் வெளியில் நடமாடுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ம-7,4)



















## மின்சார விலை...

க்களைக் குறைப்பதற்கும், சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் நான்காவது மதிப்பாய்வை வெற்றிகரமாக முடிப்பதற்கும் அவசியமானது என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைப் பணித் தலைவர் எவன் பபகியோர் ஜியோ தெரிவித்துள்ளார். (ம-7,4)

## அஞ்சல் மூல...

ளிப்பு மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றதாகப் பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

வாக்களிப்பு மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருப்பதை தனது அமைப்பு அவதானித்ததாக அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (ம-7,4)

## இறுதித்...

பெறும் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அமெரிக்க ஜனாதிபதியின் தீர்மானத்தினால் குறுகிய காலத்தில் பல நாடுகள் நெருக்கடியை எதிர்கொண்டாலும், 90 நாட்கள் சலுகைக் காலத்தில் அதற்குப் பதிலொன்றைப் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவிடமிருந்து குறுகிய காலத்தில் இதற்கு ஒரு நிவாரணத்தைப் பெற்றாலும், உலகின் ஏதோவொரு நாட்டின் தலைவர் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுக்கக்கூடும். அதற்கான கடப்பாட்டிலிருந்தும் நாம் விடுபட முடியாது.

எனவே, இலங்கையின் பிரதிநிதிகள் அமெரிக்காவின் சர்வதேச வர்த்தக, வணிக பண்டங்கள் மற்றும் நேரடி முதலீட்டுக் கொள்கை தொடர்பான பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதுடன், எழுத்துமூல சமர்ப்பணங்களையும் முன்வைத்துள்ளனர்.

அமெரிக்கத் தரப்பிடமிருந்து மேலும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளது என்றார். (ம-4,7)

## பாதாள...

கேகாலை மாவட்டம் மாவனல்லை நகரில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு தேர்தல்களிலும் சுபீட்சமான நாட்டையும் அழகிய வாழ்க்கையையும் நாட்டு மக்களுக்கு பெற்றுத் தருவோம் எனக் கூறிய தரப்பினரின் வாக்குறுதிகளை நம்பி சுப நேரத்தில் அநுரவிடம் நாட்டை மக்கள் ஒப்படைத்தனர். ஆனால் அரசாங்கம் வாக்குறுதியளித்த எதையும் இதுவரை நிறைவேற்றவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அரிசி, பால் மா, தேங்காய் ஆகியவற்றின் விலைகளைக் குறைப்பதாக உறுதியளித்தபோதும், பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளன. மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளைக்கூட வழங்க முடியாத அரசாங்கம் இன்று ஆட்சியில் இருந்து கொண்டிருக்கிறது.

தாம் முன்வைக்கும் முதலாவது வரவு செலவுத் திட்டத்திலேயே 35 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவோம் என இந்த அரசாங்கம் உறுதியளித்தபோதிலும், அந்த வாக்குறுதியும் இன்று மீறப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இன்று நாடானது சட்டம் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் மற்றும் பாதாள உலகக் கும்பல்களின் கைகளுக்குள் சென்றுவிட்டது. வீட்டில், வீதியில், வேலை செய்யும் இடத்தில் கூட துப்பாக்கிப் பிரயோகம் நடத்தும் அளவுக்கு இவர்கள் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்பியுள்ளனர்.

இன்று சட்டத்தின் ஆட்சி இல்லை. அதனைப் பேணுவதற்கான ஏற்பாடுகளும் இல்லை. பாதாள உலக நடவடிக்கை சமூகத்தை ஆக்கிரமித்துள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் தீர்வு இல்லை என எதிர்க்கட்சித்தலைவர் தெரிவித்தார். (ம-7,4)

## கனே...

இதுவரை வெளியாகியுள்ள முடிவுகளின் அடிப்படையில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட ஹரி ஆனந்த சங்கரி மற்றும் ஜூனிதா நாதன் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமையில் இருந்தே முன்னாள் பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோவின் லிபரல் கட்சி முன்னிலை வகித்ததுடன், இறுதியில் லிபரல் கட்சி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், லிபரல் கட்சியின் சார்பில் ஸ்கார்பரோ - கில்ட்வுட்டில் போட்டியிட்ட ஹரி ஆனந்தசங்கரி அங்கு முன்னிலை பெற்றுள்ளார்.

இதன்படி அவர் அங்கு 34,941 வாக்குக்ளைப் பெற்றுள்ளதாக கனேடிய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் பிக்கெர்லின் - புருக்லிவ் தொகுதியில் போட்டியிட்ட ஜூனிதா நாதன் 24,951 வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ளார்.

இந்தநிலையில், லிபரல் கட்சியின் மார்க் கார்னி மீண்டும் பிரதமராகத் தொடர்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7,4)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J.டர்மினி நகைமாடம்

நம்பிக்கையே எமது பாரம்பரியம்



செல்வம் பெருகும் அக்ஷய திருதியை நன்நாளில்
தங்க நகைகளை வாங்கி
செல்வத்தைப் பெருக்கிக்
கொள்ளுங்கள்.

அக்ஷய திருதியை
நல்வாழ்த்துக்கள்

அக்ஷய திருதியை எனும்
நன்நாளில் எம்மிடம்
கொள்வனவு செய்யும்
தங்க நகைகளுக்கு
விசேட விலைக்கழிவு
மற்றும் விசேட பரிசில்கள்
வழங்கப்படும் என்பதையும்
அறியத் தருகின்றோம்.




அக்ஷய திருதியை டர்மினி நகைமாடத்துடன்
கொண்டாடுங்கள்

இல.80/08, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
074 010 5853, 074 010 1488

(C-2848)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். வேம்படி மகளிர் உயர்தர
பாடசாலை மாணவி

செல்வி. யஸ்வந்திகா
சிறிதர்

வர்த்தகப் பிரிவு
3A D.R : 02

யாழ். மாவட்டத்திற்கும், பாடசாலை
சமூகத்திற்கும், NEC கல்வி நிறுவன
சமூகத்திற்கும் பெருமையினை
தேடித்தந்த அன்பு மகளை

பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் கல்வியில் உச்சம் தொட
எல்லாம் வல்ல கொழும்புத்துறை வதிரிபீட விநாயகரை வணங்கி
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes..!

வாழ்த்துவோர் :
பாலசுப்பிரமணியம் குடும்பம்

(C-2845)



## Pearson International College



- இலங்கையில் முதன்முறையாக TESL தகைமையுடைய கனடா விரிவுரையாளர்கள் வழங்கும் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட IELTS மற்றும் Diploma கற்கை நெறிகள்.
- தற்போது O/L எழுதிய மாணவர்களுக்கான Basic English, Dip in English நடைபெறுகின்றது.
- கற்பித்தல் உங்களுக்கு திருப்திகரமானதாக இல்லையெனில் 100% money back Guarantee
- எம்மிடம் கல்வி கற்று Band 7 க்கு மேல் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பார்த்து உறுதி செய்யுங்கள்.
- இப்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் வட மாகாணத்தில் No. 1 IELTS Coaching

074 188 7878, 074 385 7584
www.picsl.lk

TESL CANADA
TESL Ontario

(1009)



## DMI Jaffna

A/L - 2025
Day Class

ஆரம்பம் - 06.05.2025 காலை 9 மணி

ACC - D.Sam
B.S - பசில் வேஷோன்
ECO - M.விஜிதன்

077 848 0604

(C-2847)


## 448 கிலோ மஞ்சள் யாழில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து சட்டத்துக்குப் புறம்பாக கடத்திவரப்பட்ட 448 கிலோ கிராம் மஞ்சள் யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணை பிரிவினரால் கைப் பற்றப்பட்டுள்ளது.

நேற்று மண்டைதீவில் இந்தக் கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதனைக் கடத்தி வந்தவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் மற்றைய இருவர் தப்பித்துள்ளதாகவும் அவர்களைத் தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-4,7,33)


## அறிவித்தல்

076 XXX X523

மேற்படி தொடர்பு இலக்கம்
எமது சேவையில்
இருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள்,
கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள்,
மற்றும் பொதுமக்கள் மேற்படி தொடர்பிலக்கத்துடன்
தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்

ஈ - சன்ஸ்

148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695 / 077 429 0613

(C-2850)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர்
(இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு
முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

(C-2852)



## குழந்தை பராமரிப்பாளர் தேவை

வயது : 2
இடம் : வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.
நேரம் : காலை 8 மணி முதல்
மாலை 5 மணி வரை

077 696 2565

(1072)



Tamil & English Medium

## A/L கணக்கீடு

A/L 2024 Rank(Jaff) 2, 5, 10 அதிகூடிய
A மற்றும் B சித்திகள் A/L 2024 பெறுபேறு
யாழ் நகரில் மாணவர்கள்,
பெற்றோர்களின் நன்மதிப்பினைப்
பெற்றுக் கொண்ட ஆசிரியர்

MR.K.BALAKAJEN SLTS
(Tutorial Staff)

புதிய தவணைக்கான புதிய தேர்ச்சிகள்
A/L 2025& DAY, A/L 2026, A/L 2027
ஆரம்பமாகின்றது.

உங்களுக்கான தனிப்பாட அனுமதி வழங்கப்படுகின்றது

NEC- யாழ் நகர் | KBK- கந்தர்மடம்
KBK- கொழும்புத்துறை | ST- மீசாலை

KBK - Zoom online Classes

உங்கள் புதிய அனுமதிகள் மற்றும்
நேர அட்டவணைக்கு

077 452 0043

(C-2789)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org